பக்கங்கள்: பதினான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 புரட்டாதி 2 செவ்வாய்க்கிழமை (18-09-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:296

# துணைத் தளபதி உட்பட 10 கடற்புலிகள் மரணம்!

## துருப்புக்காவிக் கப்பலின் மீது தொடுக்கப்பட்ட தாக்குதலில்

வவுனியா,செப்ரெம்பர் 18

**பருத்தித்துறைக் கடற் பகுதியில் நேற்றுமுன்தினம் காலை துருப்புக்காவிக் கப்பல் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் தமது தரப்பில் கடற்புலிகளின் துணைத் தளபதி இரும்பொறை உட்பட பத்துப் போராளிகள் மரணமானதாக விடுதலைப் புலிகள் நேற்றிரவு அறிவித்தனர்.**

கடற்புலிகளின் துணைத் தளபதி இரும்பொறை மாஸ்டர்(சிவராசா கலைச்செல்வன் - திருகோணமலை) மற்றும் கடற்புலிகளான லெப்டினன்ட் கேணல் குமுதன் (தவராசதுரை ஞானேஸ்வரன் - யாழ்ப்பாணம்), மேஜர் சிவகாந்தன் அல்லது தாஸ் (சாந்தகுணவடிவேல் ரவீந்திரகுமார் - யாழ்ப்பாணம்), மேஜர் நளன் (செல்வராசா செல்வகுமார் - யாழ்ப்பாணம்), கப்டன் எழிலரசன்(நாகமணி மணிவண்ணன் - யாழ்ப்பாணம்), லெப்டினன்ட் திருவாளன் அல்லது நளன் (றோபோவாட் தேவானந்தன் - மன்னார்) ஆகியோரும் -

(14ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் 3 இளைஞர்களை காணவில்லை

வவுனியா,செப்.18

காணாமற்போன 3இளைஞர்கள் தொடர்பாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் வவுனியா அலுவலகத்தில் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

வவுனியா நிலுக்குளத்தைச் சேர்ந்த கனகர் சுதன் (வயது 18) என்பவரைக் கடந்த மாதம் 28 ஆம் திகதி தொடக்கமும் -

கொழும்பு கிராண்ட்பாஸைச் சேர்ந்த இரத்தினசிங்கம் கனகேந்திரன் (வயது 20) என்பவரைக் கடந்த 14ஆம்

(14ஆம் பக்கம் பார்க்க)

## 2 டோறாக்களை புலிகள் மூழ்கடித்ததாக அறிவிப்பு

வவுனியா,செப்.18

பருத்தித்துறைக் கடலில் நேற்று முன்தினம் தமது அணிகள் மேற்கொண்ட தாக்குதலில் இரு டோறாப் படகுகள் மூழ்கடிக்கப்பட்டன என்றும்-

இரு டோறாப்படகுகள் பலத்த சேதத்துக்குள்ளாகின என்றும் -

விடுதலைப் புலிகள் நேற்றிரவு அறிவித்துள்ளனர்.

அத்துடன் இந்தத் தாக்குதலில் கடற்படையின் ஆறு படகுகள் சிறு சேதங்களுக்கு உள்ளாகின என்றும் - துருப்புக்காவியும் சேதத்துக்கு உள்ளானது என்றும் -

புலிகள் அறிவித்துள்ளனர்.

அதிகாலை 4.30 மணி முதல் நண்பகல் 12.45 மணி வரை இந்தத் தாக்குதல் தொடர்ந்ததாகவும் -

காங்கேசன்துறை, திருமலை ஆகிய இடங்களில் இருந்து கடற்சமர் நடந்த பகுதிக்கு விரைந்த கடற்படை அணிகள் மீதும் தாங்கள் தாக்குதல்களை நடத்தியதாகவும் - புலிகள் அறிவித்துள்ளனர்.(உ-3)

## பயணிகள் கப்பல்கள் இரண்டும் இன்று திருமலைக்குப் புறப்பாடு

### மேலும் 35 பேருக்கு இடமுண்டு

யாழ்ப்பாணம்,செப்.18

'லங்கா முதித்த', 'சிற்றி ஒவ் றிங்கோ' ஆகிய இரு கப்பல்களும் பயணிகளை ஏற்றிக்கொண்டு, இன்று காங்கேசன்துறையிலிருந்து திருகோணமலைக்குப் புறப்படுகின்றன.

'லங்கா முதித்த' கப்பலில் ஆயிரத்து 200 பயணிகளையும் -

'சிற்றி ஒவ் றிங்கோ' கப்பலில் 400 பயணிகளையும் -

ஏற்றிச் செல்ல ஏற்பாடாகியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தக் கப்பல்களில் பயணம்

(14ஆம் பக்கம் பார்க்க)

## துருப்புக்காவிக் கப்பல் மீதான தாக்குதலில் பலியான 11 கடற்படையினரின் மரண விசாரணை வெள்ளியன்று மல்லாகம் நீதிமன்றில்!

யாழ்ப்பாணம்,செப்.18

பருத்தித்துறைக் கடலில் நேற்று முன்தினம் துருப்புக்காவிக் கப்பல் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் உயிரிழந்த பதினொரு கடற்படையினரின் மரண விசாரணை எதிர்வரும் வெள்ளிக்கிழமை மல்லாகம் நீதிமன்றில் இடம்பெறவிருக்கின்றது.

உயிரிழந்த பதினொருபேரின் சடலங்களும் காங்கேசன்துறைக்கு நேற்றுமுன்தினம் மாலை எடுத்துவரப்பட்டிருந்தன.

இந்த மரணங்கள் தொடர்பான விசாரணையை நடத்துவதற்கான கோரிக்கையை காங்கேசன்துறைப் பொலீஸார் மல்லாகம் நீதிவான் பா. சுப்பிரமணியத்திடம் நேற்றுமுன்தினம் இரவு அவரது வாசஸ்தலத்தில்

(14ஆம் பக்கம் பார்க்க)

## சுதந்திர ஆணைக்குழுக்கள் தொடர்பான அரசு - ஜே.வி.பி. பேச்சில் இழுபறி நிலை!

கொழும்பு,செப்.18

நீதி, பொலீஸ், தேர்தல், பொது சேவை ஆகியவற்றின் நிர்வாகம் தொடர்பாக சுதந்திர ஆணைக்குழுக்களை அமைப்பது குறித்து அரசுப் பிரதிநிதிகளுக்கும் ஜே.வி.பி. பிரதிநிதிகளுக்கும் இடையில் நேற்றிரவு இடம்பெற்ற இறுதிக்கட்டப் பேச்சுக்களில் இணக்கம் எட்டப்படவில்லை என்று கொழும்பு செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையில் ஜனாதிபதியின் வாசஸ்தலத்தில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் அரசுத் தரப்பில் ரத்னசிறி விக்கிரமநாயக்கா, அமைச்சர்களான நிமால் சிறிபால டி சில்வா, ரிச்சார்ட் பத்திரான ஆகியோரும் -

ஜே.வி.பி.சார்பில் அதன் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ஸ, பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா மற்றும் நந்தன குணதிலக ஆகியோரும் - பங்குபற்றினர்.

சுதந்திர ஆணைக் குழுக்களை அமைப்பதற்கான அரசமைப்புத் திருத்தத்தை நாடாளுமன்றத்தில்

(14ஆம் பக்கம் பார்க்க)

## 20 ஆவது அமைச்சராக இன்று தொண்டமான் பதவியேற்பார்!

கொழும்பு,செப்.18

ஜே.வி.பி. அரசுடன் பொதும்க்கள் ஐக்கிய முன்னணி அமைத்துள்ள தகுதிகாண் அரசின் 20பேர் கொண்ட அமைச்சரவையில் கடைசி அமைச்சராக இ.தொ.கா. தலைவர் ஆறுமுகம் தொண்டமான் இன்று சத்தியப்பிரமாணம் செய்யவிருக்கின்றார்.

சிங்கப்பூருக்குச் சென்றிருந்த ஆறுமுகம் தொண்டமான் நேற்றுமுன்தினம் கொழும்பு திரும்பியிருந்தார்.

ஆறுமுகம் தொண்டமான் அமைச்சர் பதவியை ஏற்பதற்கான பதவியேற்பு வைபவம் ஜனாதிபதி செயலகத்தில் நேற்று ஏற்பாடாகியிருந்தது.

அவரும் பதவியேற்பதற்காக ஜனாதிபதி அலுவலகத்துக்குச் சென்றார்.

(14ஆம் பக்கம் பார்க்க)

## சுதந்திர ஆணைக்குழு தொடர்பான நாடாளுமன்ற விவாதத்தை பகிஷ்கரிக்க கூட்டணி முடிவு

கொழும்பு,செப்.18

எதிர்வரும் 24ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவிருக்கும் சுதந்திர ஆணைக்குழு அமைப்பது தொடர்பான சட்டத் திருத்த விவாதத்தில் பங்குபற்றுவதில்லை என்று தமிழர் விடுதலைக் கூட்டணி முடிவு செய்துள்ளது.

அன்றையதினம் தமது நிலைப்பாட்டை விளக்கி அறிக்கை ஒன்றை வெளியிட்டு விட்டு நாடாளுமன்றத்திலிருந்து வெளியேறுவது என்றும்-

இந்த நடவடிக்கைக்கு ஆதரவு வழங்குமாறு அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ், ரெலோ ஆகியவற்றிடம் கோருவது என்றும் - கூட்டணி முடிவு செய்துள்ளது.

"நாட்டின் முக்கிய பிரச்சினையாக விளங்கும் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண இணையமுடியாத இரு தேசியக் கட்சிகளும் ஆணைக்குழு

(14ஆம் பக்கம் பார்க்க)

## மங்கள சமரவீரவைத் தொடர்ந்து விஜேபால மெண்டிஸும் பதவி துறப்பு: அமைச்சர்களின் எண்ணிக்கை 20 ஆனது!

கொழும்பு,செப்.18

அமைச்சரவை உறுப்பினர்களின் எண்ணிக்கையை இருபதாகக் குறைப்பதில் ஜனாதிபதிக்கு ஏற்பட்ட சிக்கலை அடுத்து -

ஜனாதிபதியின் கோரிக்கையை ஏற்று கலாசார மற்றும் விஞ்ஞானத் தொழில்நுட்பத்துறை அமைச்சர் விஜேபால மெண்டிஸ் தமது அமைச்சர் பதவியை இராஜினாமாச் செய்தார்.

தற்போதைய நெருக்கடி நிலைக்கு ஜனாதிபதி தீர்வு காண்பதற்கு உதவுவதற்காகத் தமது அமைச்சர் பதவியைத் துறக்க அவர் முன்வந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

கடந்த வெள்ளிக்கிழமை விஜேபால மெண்டிஸ் அமைச்சராக ஜனாதிபதி முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்ததாக தெரிவிக்கப்பட்டபோதும் -

அது குறித்து உத்தியோகபூர்வமான அறிவிப்பு எதனையும் அரசு வெளியிடவில்லை என்பது குறிப்பி

(14ஆம் பக்கம் பார்க்க)

பெற்றோர்களே!

வடக்கு - கிழக்கில் போலியோ மறைந்திருக்கலாம் என அஞ்சப்படுகின்றது!
உங்கள் குழந்தையை போலியோ பீடிக்காமல் இருக்க
எதிர்வரும் சனியன்று (22.09.2001) தவறாது
போலியோ தடுப்பு சொட்டுமருந்து கொடுங்கள்!

மறந்துவிடாதீர்கள்!!

MANKIND IS OUR BUSINESS

PolioPlus Rotary International

- யாழ்.றோட்டறிக் கழகம்

# அநீதியான முறையில் ஆசிரிய இடமாற்றங்கள்

## தொழிற்சங்கம் கண்டனம்

யாழ்ப்பாணம்,செப்.18

யாழ். கல்வி வலயத்தில் பணிபுரிந்த 40 ஆசிரியர்களுக்கு கடந்த 10ஆம் திகதி முதல் வழங்கப்பட்டுள்ள இடமாற்றங்கள் அநீதியான முறையில் செயற்படுத்தப்பட்டவை என்று இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் யாழ். மாவட்டக் கிளை கண்டித்துள்ளது.

யாழ். இந்து மகளிர் கல்லூரியில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற சங்கத்தின் கூட்டத்திலேயே இந்தக் கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

அண்மையில் யாழ்ப்பாணம் வந்திருந்த மாகாணக் கல்வி அமைச்சுச் செயலாளர், மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஆகியோரின் ஆலோசனைக்கு அமைய, யாழ். வலயக் கல்விப் பணிப்பாளரினால் இந்த இடமாற்றங்கள் செய்யப்பட்டதாகவும் -

இந்த இடமாற்றங்கள் ஆசிரிய இடமாற்றச் சுற்றறிக்கைக்கு முரணாக - மிகவும் அநீதியான முறையில் - மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் -கூட்டத்தில் நிர்வாகிகளால் சுட்டிக்காட்டப்பட்டது.

ஆசிரிய தொழிற் சங்கங்கள் மற்றும் சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர்களோடு கலந்தாலோசிக்காமல் மேற்கொள்ளப்பட்ட இந்த இடமாற்றங்களில் பல குறைபாடுகள் உள்ளதாகக் கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது.

53 வயதுக்கு மேற்பட்டவர்களும், சேவை நீடிப்பில், மருத்துவ விடுமுறையில் உள்ளவர்களும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளமையும் -

பொதுப் பரீட்சையை எதிர்நோக்கும் ஆண்டு 11 மாணவர்களுக்குக் கற்பிக்கும் ஆசிரியர்கள் - அதுவும் 3ஆம் தவணையில் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளமையும் -

முக்கியமான குறைபாடுகளாக தமிழர் ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள் குறிப்பிட்டனர். (ஒ-3)

## தோற்றுளைப்புழு குறித்து யாழ்.மருத்துவ மாணவர் ஆய்வு

யாழ்ப்பாணம்,செப்.18

சமீபத்தில் இடம்பெற்ற நல்லூர் கந்தசாமி கோயில் வருடாந்த மஹோற்சவத்தின்போது, ஆலய சுற்றாடலில் பரவப்பட்ட மண்ணில் இருந்து பரவியதாகக் கூறப்படும் ஒரு வகைத் தோற்றுளைப்புழுவினால் சுமார் 600 பேர்வரை பாதிக்கப்பட்டதாக யாழ்.மருத்துவபீட மாணவர்களின் ஆய்வறிக்கையில் தற்போது தெரியவந்துள்ளது.

இவர்களில் சுமார் 200 பேர்வரை யாழ்.ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுள்ளனர். இன்னும் பலர் தொடர்ந்து சிகிச்சை பெறவேண்டிய நிலையில் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் இது பற்றிய ஆய்வின் முதற்கட்டமாக இப்புழு எந்த வகையைச் சேர்ந்தது என அறியும் முயற்சியில் இப்புழு தொற்றியவரின் உடலில் இருந்து தொற்றிய புழுக்களில் ஒன்றை எடுத்து அதன் ஒரு பகுதியைக் கொழும்பு ஆய்வுகூடத்திற்கு பரிசோதனைக்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. புழுவின் மற்றொரு பகுதியை பல்கலைக்கழக ஆய்வு கூடத்தில் பரிசோதனைக்குட்படுத்தியுள்ளனர்.

இதற்கான சிகிச்சையை மேற்கொண்ட யாழ்.ஆஸ்பத்திரி தோல் சிகிச்சைப்பிரிவு வைத்திய நிபுணரினால் இப்புழு ஒருவரின் உடலில் இருந்து சத்திரசிகிச்சை மூலம் பிரித்தெடுத்து ஆய்வுக்காகவும் வழங்கப்பட்டது.

இப்புழுக்கள் மின்சாரசக்தியின் உதவியுடன் சுட்டெரித்தே நோயாளியின் உடலிலிருந்து அழிக்கப்படுகின்றன. இவற்றை இல்லாமல் செய்வதற்கான மருந்து யாழ்ப்பாணத்தில் இல்லாததாலேயே இச்சிகிச்சை முறை கடைப்பிடிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

வீட்டு வளர்ப்பு மிருகங்களான நாய், பூனையின் மலக்கழிவுகளில் இருந்தே இப்புழு பரவி வருவதாகக் கருதப்படுகிறது.

(ஒ-15)

### தமது சம்பளத்தின் அரைப்பங்கை

## நாட்டுக்காக தியாகம் செய்ய அரசு உறுப்பினர்கள் பின்னடிப்பு

கொழும்பு,செப்.18

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசில் அங்கம் வகிக்கும் உறுப்பினர்கள் எவருமே ஜே.வி.பியுடனான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் குறிப்பிட்டுள்ள - தமது மாதச் சம்பளத்தில் 50 சதவீதத்தை திரட்டப்பட்ட, பன்முகப்படுத்தப்பட்ட நிதிக்கு வழங்கும் நடவடிக்கையை- செயற்படுத்த முன்வரவில்லை என்று நாடாளுமன்ற வட்டாரங்கள் தெரிவித்தன.

ஆனால் இந்த விடயத்தில் ஜே.வி.பியினர் கடும் போக்கைக் கடைப்பிடிக்கப்போவதில்லை என்றே கூறப்படுகிறது.

ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் நந்தன குணதிலக இது குறித்துக் கூறுகையில் -

இது முற்றுமுழுதாக சுயவிருப்போடு சேவை மனப்பான்மையுடன் செயற்படுத்த வேண்டிய விடயம் என்று புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியில் தமது சம்பளத்தின் அரைப்பங்கை பன்முகப்படுத்தப்பட்ட நிதிக்கு வழங்கத் தயாராக உள்ளவர்கள் என்று ஜனாதிபதியால் குறிப்பிடப்பட்டவர்கள் கூட இதுவரை இது தொடர்பாக எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

தமது மாதச் சம்பளத்தில் 50 சதவீதத்தை பன்முகப்படுத்தப்பட்ட நிதிக்காகப் பிடித்தம் செய்வதற்கான இணக்கத்தை ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஏற்கனவே வழங்கிவிட்டனர்.

நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஒரு மாதச் சம்பளம் 36ஆயிரம் ரூபா என்பது குறிப்பிடத்தக்கது. (உ-ஒ)

## கொழும்பு - துபாய் விமான சேவையை எமிரேட்ஸ் நிறுத்தியது

கொழும்பு,செப்.18

கொழும்புக்கும் துபாய்க்கும் இடையிலான தனது விமான சேவைகளை காலவரையறையின்றி நாளை முதல் நிறுத்துவதாக 'எமிரேட்ஸ்' விமான சேவை நிறுவனம் அறிவித்துள்ளது.

பண்டாரநாயகா சர்வதேச விமான நிலையத்தில் தரையிறங்கும் ஒவ்வொரு விமானத்துக்குமான காப்புறுதிக் கட்டணங்கள் பெருமளவில் அதிகரித்ததாலேயே, கொழும்புடனான தனது சேவைகளை நிறுத்துவதாக அந்த நிறுவனம் தெரிவித்தது. (ஒ-4)

## கொடிகாமத்திற்கு மினிபஸ் சேவை

தென்மராட்சி,செப்.18

தென்மராட்சி தனியார் சிற்றூர்தி சேவைகள் சங்கத்தினர் யாழ்ப்பாணம், மானிப்பாய் ஆகிய இடங்களிலிருந்து கொடிகாமத்திற்கு மினிபஸ் சேவைகளை ஆரம்பித்துள்ளனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து 769 இலக்க மார்க்கமாக தினமும் 3 சேவைகளும் மானிப்பாயிலிருந்து தினமும் 811 இலக்க மார்க்கத்தில் இரண்டு சேவைகளும் கொடிகாமத்திற்கு இடம்பெறுமென சங்க வட்டாரங்கள் தெரிவித்தன. (ஒ-117)

## தாக்குதலுக்குள்ளான கப்பலில் நிவாரண அரிசியும் வந்ததாம்

யாழ்ப்பாணம்,செப்.18

பருத்தித்துறைக் கடற்பரப்பில் நேற்றுமுன்தினம் தாக்குதலுக்கு இலக்கான 'பிறைட் ஒவ் சவுத்' என்ற கப்பலில் யாழ். செயலகத்துக்கென 2ஆயிரத்து 150 மெற்றிக்தொன் அரிசியும் எடுத்துவரப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

நிவாரண விநியோகத்துக்கென எடுத்துவரப்பட்ட இந்த அரிசியை இறக்க ஏற்பாடு செய்யும்படி யாழ். செயலகத்திடம் நேற்று கோரப்பட்டதாகவும் -

அதைத் தொடர்ந்து அரிசியை எடுத்துவர லொறிகள் காங்கேசன்துறைக்கு அனுப்பப்பட்டதாகவும் - செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (ஒ-3)

## விடுதலைப் புலிகள் மேற்கொண்ட 66 தற்கொலைத் தாக்குதல்கள்

### ஊடகத் தகவல் நிலையம் தெரிவிப்பு

கொழும்பு,செப்.18

விடுதலைப் புலிகள் இதுவரை 66 தற்கொலைத் தாக்குதல்களை மேற்கொண்டுள்ளதாக விசேட ஊடகத் தகவல் நிலையம் விடுத்துள்ள களநிலைவர அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவற்றில் பத்துத் தாக்குதல்கள் நாட்டின் பொருளாதார நிலைகளை இலக்கு வைத்து நடத்தப்பட்டவை என்றும் -

ஏனையவை இராணுவ முகாம்கள் மற்றும் நாட்டுத் தலைவர்களை இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்டவை என்றும் - அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

1995ஆம் ஆண்டு ஒக்ரோபர் 24 ஆம் திகதி கொலன்னாவ எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் மீதும், 1996 ஆம் ஆண்டு ஜனவரி 31ஆம் திகதி இலங்கை மத்தியவங்கி மீதும், 2001 ஆம் ஆண்டு ஜுலை 23ஆம் திகதி கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையம் மீதும் விடுதலைப் புலிகள் தற்கொலைத் தாக்குதல்களை மேற்கொண்டனர்.

முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் விஜயரத்ன, இராணுவக் கொமாண்டர் டபிள்யூ.சி.பெர்னாண்டோ, முன்னாள் ஜனாதிபதி ஆர்.பிரேமதாஸ, ஜனாதிபதி வேட்பாளர் காமினி திஸநாயக்க ஆகியோரும் தற்கொலைத் தாக்குதல்களிலேயே கொல்லப்பட்டனர்.

இவ்வாறு விசேட ஊடகத் தகவல் நிலையம் மேலும் தெரிவித்தது.

(ஒ-4)

## வடமராட்சி தெற்கு - மேற்கு பகுதியில் மாட்டிறைச்சிக் கடைகள் மூடப்பட்டன

தென்மராட்சி,செப்.18

வடமராட்சி தெற்கு - மேற்கு பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள அனைத்து மாட்டிறைச்சிக் கடைகளும் மறு அறிவித்தல் வரை மூடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

கரவெட்டி ஞானாசாரியார் கல்லூரிக்கு அருகில் உள்ள கொல்களத்தில் கழிவுகள் அகற்றப்படாமல் இருந்ததாகவும் -

அவற்றை நாய்கள் இழுத்து வந்து பாடசாலை உட்பட அருகில் உள்ள பகுதி முழுவதையும் அசுத்தப்படுத்துவதாக பிரதேச சபைக்கு முறைப்பாடுகள் வந்ததாகவும் -

இதனையடுத்து கொல்களம் தற்காலிகமாக மூடப்பட்டதாலேயே மாட்டிறைச்சிக் கடைகளும் மூடப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.(ஒ-117)

## புலிகள் மீதான தடையை இந்திய அரசு நீக்கவேண்டும்

### தமிழக மாநாட்டில் தீர்மானம்

சிதம்பரம்,செப்.18

இந்தியாவில் விடுதலைப் புலிகள் மீது விதிக்கப்பட்டுள்ள தடையை உடனடியாக நீக்கவேண்டும் என்று ஈழத்தமிழர் ஆதரவு எழுச்சி மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தமிழகத்தின் சிதம்பரத்தில் பழ. நெடுமாறன் தலைமையில் நேற்றுமுன்தினம் இந்த எழுச்சி மாநாடு இடம்பெற்றது.

மாநாட்டில் தொடக்கவுரையாற்றிய, தமிழ் சான்றோர் பேரவை நிறுவுநர் ம.அருணாசலம்,

"தமிழர்களுக்கு எதிராக இலங்கை அரசு கொடிய இராசாயன ஆயுதத்தைப் பயன்படுத்துகின்றது. இந்த நச்சுப்புகை யாழ்ப்பாணத்திலிருந்து தமிழ்நாட்டின கடலோரப் பகுதிகளிலும் பரவும் அபாயம் உள்ளது.

"1993ஆம் ஆண்டு பாரிஸில் நடைபெற்ற சர்வதேச மாநாட்டில் இரசாயன ஆயுதங்களைப் பயன்படுத்துவதற்கு உலக நாடுகள் அனைத்துக்கும் தடை விதிக்கவேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டது.

இந்தத் தீர்மானத்துக்கு எதிராக இரசாயன ஆயுதங்களை வாங்கிக் குவித்திருக்கும் இலங்கை அரசுக்கு கண்டனமும் எச்சரிக்கையும் இந்திய அரசு விடுக்கும் அதேவேளை புலிகள் மீது விதித்துள்ள தடையையும் நீக்கவேண்டும்" - இவ்வாறு அவர் கேட்டுக்கொண்டார்.

இந்த மாநாட்டில் 'ஈழப்போரில் உலகத் தாக்கம்' எனும் தலைப்பிலான கலந்துரையாடலும் இடம்பெற்றது.

ஈழத்தமிழர் ஆதரவு மாநாட்டுக்கு தமிழக அரசு முன்னர் தடை விதித்ததும் - அதனை ஆட்சேபித்து பழ. நெடுமாறன் நீதிமன்றத்தில் முறையிட்டதை அடுத்து மாநாட்டை நடத்த அனுமதி வழங்கும்படி தமிழக அரசுக்கு நீதிமன்றம் உத்தரவிட்டதும் குறிப்பிடத்தக்கவை. (ஒ-4)

## 'லங்கா முதித்த' பயணிகள் இருப்பிடங்களை அடைந்தனர்

யாழ்ப்பாணம்,செப்.18

திருகோணமலையில் இருந்து 'லங்கா முதித்த' கப்பலில் அழைத்துவரப்பட்ட 783 பயணிகளும் நேற்றுப் பிற்பகலில் தமது இருப்பிடங்களுக்குச் சென்றனர்.

நேற்றுமுன்தினம் மாலை காங்கேசன்துறைத் துறைமுகத்தை வந்தடைந்த இந்தக் கப்பலில் இருந்து பயணிகள் நேற்றுக் காலையே இறங்க அனுமதிக்கப்பட்டனர்.

பின்னர் தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலயத்துக்கு அழைத்துவரப்பட்ட பயணிகளுக்கு அங்கு மதிய போசனம் வழங்கப்பட்டது.

அதன் பின்னர் மேற்கொள்ளப்பட்ட பதிவுகளை அடுத்து அவர்கள் தத்தமது இருப்பிடங்களுக்குச் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

கடந்த சனிக்கிழமை மாலை திருகோணமலையிலிருந்து புறப்பட்ட 'லங்கா முதித்த' பருத்தித்துறைக் கடலில் இடம்பெற்ற கடற்சமரின் காரணமாகப் பல மணித்தியாலங்கள் தாமதித்தே காங்கேசன்துறைத் துறைமுகத்தை வந்தடைந்தது தெரிந்ததே.

(ஒ-3-17)

## கிளிநொச்சியில் ஊனமுற்றோர் கொடிதினம்

கிளிநொச்சி மாவட்ட ஊனமுற்றோர் சங்கம் நேற்று முதல் எதிர்வரும் 22 ஆம் திகதி வரை கொடி தினத்தை அனுஷ்டித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஊனமுற்றவர்களின் தேவைகளை இனங்கண்டு பூர்த்தி செய்வதற்குத் தேவையான நிதியைத் திரட்டும் நோக்கிலேயே இந்தக் கொடி தினம் அனுஷ்டிக்கப்படுவதாகவும் -

இதன்மூலம் ஊனமுற்றவர்களின் எதிர்கால வாழ்வுக்கு உதவுவதுடன், மக்கள் மத்தியில் ஊனமுற்றோருக்கு உதவுவது குறித்த விழிப்புணர்வினை ஏற்படுத்தவும் முடியும் என்றும் - கிளிநொச்சி மாவட்ட ஊனமுற்றோர் சங்கம் தெரிவித்துள்ளது.

(ஒ-4)


## ஸ்ரீ வல்லிபுரா போட்டோ

SVP

★ 07.09.2001 வரை எம்மிடம் ஒப்படைக்கப்பட்ட படச்சுருள்கள் யாவும் பிரதியாக்கம் செய்து வந்துவிட்டன.

★ 19.09.2001 அன்று படச்சுருள்களும் வீடியோ கசற்றுகளும் கொழும்புக்கு அனுப்பிவைக்கப்படும்.

★ கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு வீடியோ கசற் எடுத்துவர ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைக்கலாம்.

**UTHAYAN VIDEO**
7, 7/4, Ground Floor,
Orchard Building, Galle Road,
Wellawatha,
Colombo - 06

நல்லூர் 021-2604

புலோலி 070-212720

(C/18318)



## மரண அறிவித்தல்

### இளையதம்பி இராசநாயகம்

அச்சுவேலி தெற்கை (தச்சன்தோட்டம்) பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இளையதம்பி இராசநாயகம் நேற்று (17.09.2001) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையதம்பி சரஸ்வதியின் மூத்த மகனும், இராஜேஸ்வரியின் (யாழ். மாநகரசபை நூலகம்) அன்புக் கணவரும், ஜனகன் (யா/பரியோவான் கல்லூரி வர்த்தகப் பிரிவு-2002 உயர்தர மாணவன்), ஜவகன் (யா/பரியோவான் கல்லூரி தரம்-10) ஆகியோரின் அன்புத் தந்தையும், சாந்தநாயகி (ஜேர்மனி), வேதநாயகி (ஜேர்மனி), சபாநாயகம் (ஜேர்மனி), சசிகலா (இலங்கை) ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற இராசரட்ணம் (ஜேர்மனி), பாலசுப்பிரமணியம் (ஜேர்மனி), பரந்தில்லைராஜா (தபால் ஊழியர், வல்வெட்டித்துறை), தேவநாயகி (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.09.2001) செவ்வாய்க்கிழமை மதியம் 12.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முழங்கன் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இ.இராஜேஸ்வரி (மனைவி)
(யாழ். மாநகரசபை நூலகம்)

அச்சுவேலி தெற்கு. (92427)

வர்த்தக மையம், பென்டகன் மீதான தாக்குதலின் எதிரொலி

# முக்கிய கட்டடங்களை நோக்கி வரும் விமானங்களை சுட்டுவீழ்த்த உத்தரவு

## அமெரிக்க அதிபர் புஷ் விடுத்தார்

நியூயோர்க்,செப்.18

அமெரிக்காவில் அதிபர் மாளிகை மற்றும் முக்கிய கட்டடங்களை நோக்கிப் பறந்துவரும் சந்தேகத்துக்கிடமான விமானங்களைச் சுட்டு வீழ்த்த அதிபர் புஷ் உத்தரவிட்டுள்ளார்.

துணை அதிபர் டிக் ஷெனி இந்தத் தகவலை வாஷிங்ரனில் செய்தியாளர்களிடம் பேசும்போது தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"முக்கிய கட்டடங்களை நோக்கி வர்த்தக விமானங்கள் வந்தால் அவற்றின் மீது தாக்குதல் நடத்துவது என்று அண்மையில் நடைபெற்ற பாதுகாப்புத் தொடர்பான உயர் மட்டத் தலைவர்களின் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

"அத்தகைய விமானங்கள் உடனடியாகத் தமது பாதையை மாற்றிக்கொள்ள வேண்டும் அல்லது விமானிக்கு வழங்கப்படும் கட்டளைக்கு ஏற்ப அவர் நடந்துகொள்ள வேண்டும்.

"இல்லையாயின் அந்த விமானத்தின் மீது தாக்குதல் நடத்தப்படும்.

"இதற்கான உத்தரவை அதிபர் புஷ் உடனடியாகவே விடுத்தார். இத்தகைய விமானங்களை சுட்டு வீழ்த்துமாறு உத்தரவிட்ட அவர் இந்தத் தாக்குதல்களுக்கு 'எவ்-16' ரக போர் விமானங்களையும் பயன்படுத்துமாறும் உத்தரவிட்டுள்ளார்.

"இது அபாயகரமான முடிவு என்று மக்கள் கருதுகின்றனர். ஆனால் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு இதைத் தவிர வேறு வழியில்லை."

- என்று மேலும் அவர் தெரிவித்தார்.

(ம-9)

## வாஜ்பாய் – புஷ் தொலைபேசியில் 10 நிமிட நேரம் உரையாடினர்

அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் டபிள்யூ. புஷ்ஷும் இந்தியப் பிரதமர் அடல்பிஹாரி வாஜ்பாயும் நேற்று முன்தினம் இரவு தொலைபேசி மூலம் 10 நிமிடங்கள் உரையாடியுள்ளனர்.





கடந்தவாரம் அமெரிக்காவில் இடம்பெற்ற தாக்குதல்கள் குறித்தே இருவரும் உரையாடியதாகத் தெரிவிக்கப்பட்டது.

அமெரிக்கா மீதான தாக்குதல்களுக்கு எதிராக அந்த நாடு மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு தனது நாடு முழு ஆதரவு வழங்கும் என்று வாஜ்பாய் அதிபர் புஷ்ஷுக்கு உறுதியளித்துள்ளார்.

அதேநேரம் அமெரிக்காவில் இருக்கும் இந்தியர்கள் மீது தாக்குதல்கள் நடத்தப்படாமல் இருப்பதை உறுதிப்படுத்துமாறும் வாஜ்பாய் புஷ்ஷிடம் கேட்டுள்ளார்.

இந்த உரையாடலுக்குப் பின்னர் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அதிபர் புஷ், இந்தியாவின் ஆதரவுக்கு நன்றி தெரிவித்தார். (ம-9)

## ஹொங்ஹொங்கில் உள்ள அமெரிக்க தூதரகம் மூடப்பட்டது

ஹொங்ஹொங் சிற்றி,செப்.18

ஹொங்ஹொங்கில் உள்ள அமெரிக்கத் தூதரகம் காலவரையறை இன்றி மூடப்பட்டுள்ளது.

பாதுகாப்பு ஏற்பாடுகளை கருத்தில் கொண்டு நேற்றுமுதல் தூதரகம் மூடப்படுவதாக தூதரக செய்தித் தொடர்பாளர் ஒருவர் தெரிவித்தார்.

இதற்கிடையில் -

அமெரிக்கத் தூதரகம் அளித்த தகவல் ஒன்றின் அடிப்படையில் - ஆப்கானிஸ்தான் மீது தாக்குதல் நடத்தப்பட்டால் பதில் தாக்குதல் நடத்தும்படி உத்தரவிடப்பட்டிருந்த - 5 பாகிஸ்தானியர்களை ,சீனப் பொலீஸார் மக்காங் என்ற பகுதியில் வைத்துக் கைது செய்துள்ளனர்.

இவர்கள் காலாவதியான 'விஸா'க்களை வைத்திருந்ததாகவும் -

பல குற்றச் செயல்களில் தொடர்புபட்டிருந்ததாகவும் -

சீனப் பொலீஸார் தெரிவித்தனர். (ம-9)

## அமெரிக்க போர்க் கப்பல்கள் ஒத்திகை

டிலி,செப்.18

கிழக்குத் திமோர் கடற்பகுதியில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை அமெரிக்கப் போர்க் கப்பல்கள் போர் ஒத்திகை நடவடிக்கையில் ஈடுபட்டன.

உலக அரங்கில்

பல நூற்றுக்கணக்கான போர்க் கப்பல்களும், ஹெலிகளும் இந்த ஒத்திகையில் பயன்படுத்தப்பட்டன.

6 ஏ.வி. - 8 ஹரியர் ஜெற் விமானங்களைக் காவிச் செல்லும் விமானம்தாங்கிக் கப்பல் ஒன்றும் இந்த ஒத்திகையில் கலந்துகொண்டது.

(ம-9)

## 5 குழந்தைகள் உட்பட 14 அகதிகள் தமிழகம் சென்றனர்

சென்னை,செப்.18

இலங்கையிலிருந்து நான்கு பெண்கள், ஐந்து குழந்தைகள் உட்பட 14 அகதிகள் நேற்றுமுன்தினம் படகுகள் மூலம் இராமேஸ்வரத்தைச் சென்றடைந்துள்ளனர்.

இவர்கள் அனைவரும் பொலீஸாரின் விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் மண்டபம் அகதி முகாமுக்கு அனுப்பி வைக்கப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

(ம)

# பதில் தாக்குதல் நடத்த அமெ.இராணுவம் தயார்

வாஷிங்ரன்,செப்.18

கடந்த வாரம் அமெரிக்கா மீது நடத்தப்பட்ட தாக்குதல்களுக்கு காரணமானவர்கள் மற்றும் அதன் பின்னணியில் இருந்தவர்கள் என்று அமெரிக்கா கருதி வருபவர்களுக்கு எதிரான பதிலடி நடவடிக்கைக்கு அமெரிக்கா இராணுவம் தயாராகி விட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

"எதிரியை அவனது மறைவிடத்தில் இருந்து வெளியே கொண்டு வருவதற்குத் தயாராகுங்கள்" - என்று அதிபர் புஷ் இராணுவத்துக்கும் ரிசேர்வ் படையினருக்கும் அறைகூவல் விடுத்திருந்தார்.

இதனை அடுத்து அமெரிக்காவின் முழு இராணுவமும் ரிசேர்வ் படையினரும் எந்த நேரத்திலும் யுத்தத்தை ஆரம்பிக்கும் ஆயத்த நிலையில் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கிடையில் -

தனது பதிலடி நடவடிக்கை யில் விமானத் தாக்குதல்கள், ஏவுகணைத் தாக்குதல்கள் என்பவற்றுடன் தரைப்படைகளையும் ஈடுபடுத்துவது குறித்தும் ஆராய்ந்து வருவதாகக் கூறப்படுகிறது. (ம-9)

## பங்களாதேஷின் உதவியையும் கோருகின்றது அமெரிக்கா

ஆப்கானிஸ்தான் மீது தாக்குதல் நடத்துவதற்கு பங்களாதேஷ் தனது வான்பரப்பையும் துறைமுகங்களையும் அமெரிக்கா பயன்படுத்த அனுமதிக்குமாறு அமெரிக்கா பங்களாதேஷிடம் கோரியுள்ளது.

"ஆப்கானிஸ்தான் மீது தாக்குதல் நடத்தப்பட்டால் டாக்கா தனது வான் எல்லையையும் துறைமுக வசதிகளையும் அளிக்குமா" - என்று அமெரிக்கா கேட்டுள்ளதாக பங்களாதேஷின் முக்கிய செய்தித்தாளான 'டெய்லி ஸ்ரார்' தெரிவித்துள்ளது.

பங்களாதேஷ் வான்பரப்பில் அமெரிக்க விமானங்கள் பறப்பதற்கான அனுமதி, விமானங்களுக்கு எரிபொருள் நிரப்புவதற்கான வசதிகள் என்பவற்றையும் புஷ் அரசு கோரியுள்ளதாகவும் -

நெருக்கடித் திட்டத்தின் ஒரு பகுதியாக இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகவும் -

இதுகுறித்து பங்களாதேஷ் நேற்றுப் பிற்பகல் வரை பதிலளிக்கவில்லை என்றும் - கூறப்படுகிறது. (ம)

## பார்வையற்ற தனது எஜமானை உயிரைக் கொடுத்து காத்த நாய்

நியூயோர்க் நகரில் உலக வர்த்தக மையக் கட்டடத்தின் மீதுநடந்த தாக்குதலின்போது பார்வையற்ற தனது எஜமானரை செல்ல நாய் தன் உயிரைக் கொடுத்துக் காப்பாற்றியது. இந்தச் சம்பவம் பெரும் நெகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

உலக வர்த்தக மையத்தில் வேலை பார்த்து வருபவர் மைக்கேல் ஹிங்சன். கண்பார்வையில்லாத இவர் முதற்கோபுரம் தகர்க்கப்பட்ட போது, அதன் 78 ஆவது மாடியில் வேலை செய்துகொண்டிருந்தார். விமானம் மோதியவுடன் கட்டடம் ஆடியது. அங்கு வேலை பார்த்துக் கொண்டிருந்த அனைவரும் உடனடியாக அலறியடித்துக்கொண்டு ஓடினார். என்ன நடக்கிறது என்பதை அறிய முடியாமல் ஹிங்சன் திண்டாடினார். இந்த நிலையில் மேல் மாடியில் இடிபாடுகளுக்குள் சிக்கிக் கொண்டவர்களை மீட்பதற்காக தீயணைப்பு வீரர்கள் இரகசிய வழியைப் பயன்படுத்தி மேலே வந்து கொண்டிருந்தனர்.

ஹிங்சன் அருகில் இருந்த நாய் ரோஸ்சி ஹிங்சனுக்கு அந்த இரகசிய வழியைக் காட்டி அவர் வெளியேற உதவி செய்தது. அவர் வெளியேறிய அடுத்த சில நிமிடங்களில் அந்த மாடி இடிந்து விழுந்தது. மீட்புக்காக உள்ளே சென்ற தீயணைப்பு வீரர்களும் இடிபாடுகளில் சிக்கி மடிந்தனர். செல்லநாயும் அவர்களுடன் மடிந்தது. கிங்சன் மட்டும் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினார். (ம)



தாக்குதலுக்கு இலக்காகி தரைமட்டமான உலக வர்த்தக மையக் கட்டடம் இருந்த இடத்தில் குவிந்து கிடக்கும் இடிபாடுகளை அகற்றும் பணியில் ஈடுபட்டுள்ள பணியாளர்களுக்குத் தலைமை தாங்குபவரின் தோள்களில் கைபோட்டவாறு மீட்புப் பணியாளர்களின் சேவையைப் பாராட்டிப் பேசுகிறார் அதிபர் புஷ்.

## மஷார் ஏ ஷெரீப் நகரில் தலிபான் நிலைகளின் மீது எதிரணி விமானத் தாக்குதல்

காபூல்,செப்.18

ஆப்கானிஸ்தானில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த மஷார் ஏ ஷெரீப் நகரில் உள்ள தலிபான் இலக்குகள் மீது தலிபானுக்கு எதிரணிகளின் கூட்டணி கடும் விமானத் தாக்குதல்களை நடத்தியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிரணிக் கூட்டணியின் தலைவரான அகமத் ஷா மசூத் அண்மையில் கொல்லப்பட்டதற்குப் பழிவாங்கும் வகையில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாக எதிரணிக் கூட்டணிக்குச் சார்பான செய்தி நிறுவனம் ஒன்று தெரிவித்தது.

போர் விமானங்கள் நடத்திய இந்தக் கடும் தாக்குதலில் தலிபான்களின் இராணுவ சேமிப்புக் கிடங்குகளும் இராணுவ வாகனங்களும் வெடித்துச் சிதறியதாகவும் அந்தச் செய்தி நிறுவனம் மேலும் தெரிவித்தது.

இந்தத் தாக்குதலால் மஷார் ஏ ஷெரீப் நகரம் தீப்பற்றி எரிந்ததாகவும் -

நகரத்தில் இருந்த தலிபான் படையினரும் அரபுக் கூலிப் படையினரும் தப்பி ஓடுவதாகவும் -

ரஷ்யப் பத்திரிகை ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

ஆப்கானிஸ்தான் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தும் ஏது நிலை அதிகரித்துவரும் இந்த நேரத்தில் தலிபான் எதிரணிப் படைகள் இந்தத் தாக்குதலை நடத்தி இருப்பது குறிப்பிடத்தக்கது.

(ம-9)

## சேது சமுத்திரத் திட்ட ஆய்வுக்கு ஐந்து கோடி ரூபா நிதி ஒதுக்கீடு

புதுடில்லி,செப்.18

சேது சமுத்திரத் திட்டம் குறித்த விரிவான ஆய்வுகளை நடத்துவதற்காக இந்திய மத்திய அரசாங்கம் 4 கோடி 80லட்சம் ரூபா நிதியை ஒதுக்கியுள்ளது.

தூத்துக்குடி துறைமுகக் கழகத் தலைவர் மகேந்திரநாதன் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

சேது சமுத்திரத் திட்டத்தின் பொருளாதார சாத்தியம், திட்டத்தைச் செயற்படுத்துவதால் ஏற்படக்கூடிய சுற்றுச்சூழல் விளைவு என்பன குறித்து இந்த ஆய்வு மேற்கொள்ளப்படும்.

இத்தகைய ஆய்வுகளுக்காக சர்வதேச ரீதியில் கேள்வி அறிவித்தல்கள் விடப்பட்டுள்ளன. பொருத்தமான கேள்வி கிடைத்ததும் பணிகள் ஆரம்பிக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

(ம-9)

## பதிலடி நடவடிக்கைகளில் உலகளாவிய கூட்டணி அமைக்கும் அமெ.முயற்சிக்குப் பெரும் ஆதரவு!

அமெரிக்காவில் கடந்தவாரம் இடம்பெற்ற தாக்குதல்களுக்குக் காரணமானவர்கள் மீது பதிலடி வழங்கும் நடவடிக்கைக்காக உலகளாவிய கூட்டணி ஒன்றை அமைக்கும் அமெரிக்க அதிபர் புஷ்ஷின் முயற்சிக்கு ஆதரவு திரண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தாக்குதலுடன் தொடர்புடையதாகச் சந்தேகிக்கப்படும் இஸ்லாமியத் தீவிரவாதத்துக்கு எதிரான தாக்குதலுக்கு நேட்டோ நாடுகள் தமது முழு ஆதரவைத் தெரிவித்துள்ளன. இந்த நாடுகள் அமெரிக்காவுக்கு இராணுவ ரீதியிலான உதவிகளையும் வழங்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. ரஷ்யா, இந்தியா, பாகிஸ்தான், ஜப்பான் மற்றும் முன்னாள் சோவியத் நாடுகளும் அமெரிக்காவுக்குத் தமது பூரண ஆதரவை வழங்கியுள்ளன.

சீனாவும் பயங்கரவாதத்துக்கு எதிரான அமெரிக்காவின் நடவடிக்கையை ஆதரித்த போதும் போரைவிட சமாதானமே சிறந்தது என்று தெரிவித்துள்ளது. அமெரிக்கா இந்த விடயத்தில் அவசரப்பட்டு பதிலடி நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடாது என்றும் எச்சரிக்கை எழுப்பப்பட்டுள்ளது.

முஸ்லிம் நாடுகளை மேற்குலக நாடுகளுக்கு எதிராகத் திருப்பும் அமெரிக்காவின் வெளியுறவுக் கொள்கைக்குப் பல நாடுகள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன. (ம-9)

# வண்ணையில் கோயில் கொண்டு காத்தருள் புரியும் வேங்கடேசன்

வண்ணை ஸ்ரீ வேங்கடேசப்பெருமாள் ஆலய மஹோற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. அதனை ஒட்டி இக்கட்டுரை பிரசுரமாகின்றது.

காத்தற் கடவுளான ஸ்ரீ மகா விஷ்ணு மூர்த்தியானவர் தமது பக்தர்களைக் காத்தருள் புரியும் பொருட்டு எழுந்தருளி வீற்றிருந்தருள் புரியும் புனித ஸ்தலம்தான் யாழ். வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் ஆலயம்.

### 10 நாள் திருவிழா

துஷ்ட நிக்கிரக சிஷ்ட பரிபாலனஞ் செய்யும் ஸ்ரீ மந் நாராயணன் ஸ்ரீதேவி, பூமி தேவி சமேதராக அருட் காட்சிதரும் இந்த ஆலயத்தில் வருடந்தோறும் புரட்டாதி மாத அமாவாசையையடுத்து வரும் திருவோண நட்சத்திர நாளைத் தீர்த்தோற்சவமாகக் கொண்டு மஹோற்சவம் நடைபெறும்.

பத்து நாள் உற்சவத்தில் கொடியேற்றம், வெண்ணெய்த்தாளிச்சேவை, ஸ்ரீ சயனச்சேவை, தேர், தீர்த்தம், திருக்கல்யாணம், ஆஞ்சநேயர் பொங்கல் விழாக்கள் மிகவும்

## இராசையா ஸ்ரீதரன்

விசேடமானவை. விழாக் காணவரும் பக்தர்கள் பக்தி பூர்வமாகப் பெருமானைச் சேவிப்பார்கள்

### ஸ்தல விருட்சம் - பலா

வானளாவ உயர்ந்த அழகிய இராஜகோபுரத்துடன் விளங்கும் இந்த ஆலயத்தில் திருவிழா தொடங்கி விட்டால் ஆலயச் சுற்றாடலே விழாக்கோலம் பூண்டு புனித இடமாகக் காட்சியளிக்கும். இக்கோயிலின் ஸ்தல விருட்சம் பலாமரமாகும். ஆலயத்தின் உட்பிரகாரத்தில் இலக்குமி அம்பாள் சந்நிதிக்குப் பின்பக்கத்தில் இந்த விருட்சத்தைக் காணலாம். இம்மரம் பொறையாக இருப்பதுடன் ஒரு பக்கத்தில் வெளியாகவும் இருக்கின்றது. இதன் நடுமரம் அழிந்து போகவே சுற்றிவர அதன் அடிமரம் காணப்படுகின்றது. பக்கங்களின் அடியிலிருந்து கிளைகளும் தோன்றுகின்றன.

கோயில் கட்டுமுன் ஒருபெரியவர் இப் பலாமரத்தடியில் ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாளின் விக்கிரகத்தை வைத்து வணங்கி வந்தாரென்றும் அதிலிருந்தே இந்த ஆலயம் தோன்றியதென்றும் ஓர் ஐதீகமிருக்கின்றது. ஈழத்திற் சிறந்த வைஷ்ணவ ஆலயங்களுள் ஒன்றான இது சரித்திரப் பிரசித்திபெற்ற தொன்மை வாய்ந்ததாகும். பண்டாரவளைச் செட்டிப் பிள்ளைகள் என்றழைக்கப்படும் பத்மசாலச் செட்டிப் பிள்ளைகளால் இந்தக்கோயில் ஸ்தாபிக்கப்பட்டுப் பரிபாலிக்கப்பட்டு வருகின்றது. இங்கு வைகாசன முறைப்படி கிரிகைகள் நடைபெறுகின்றன.

### நாராயணனே முதற் கடவுள்

சநாதன தர்மம் எனப்படும் இந்து சமயத்தின் பிரிவுகளில் ஒன்று வைஷ்ணவம். ஸ்ரீமந் நாராயணனை முழுமுதற் கடவுளாகக் கொண்டு விளங்கும் வைஷ்ணவத்துக்குப் பாஞ்சராத்திரம், பாகவத மதம், சாத்வாதமதம், ஏகாந்தியதர்மம் எனப் பல பெயர்கள் உண்டு.

பிருந்தாவனம், கோகுலம், துவாரகை முதலியவற்றில் ஸ்ரீ கிருஷ்ணனாகவும், திருப்பதியில் ஸ்ரீநிவாசனாகவும், சிதம்பரத்தில் கோவிந்தராஜ



னாகவும், ஸ்ரீ ரங்கத்தில் அரங்கநாதனாகவும், மதுரையில் அழகராகவும், திருவனந்தபுரத்தில் ஸ்ரீ பத்மநாபனாகவும் எழுந்தருளி வீற்றிருந்து அருள்பாலிக்கின்றார் திருமால்.

### நாலாயிரத் திவ்ய பிரபந்தம்

ஸ்ரீ வேங்கடேசனைப் புகழ்ந்து இனிய இலகு தமிழில் பாடிப் பரவசப்பட்ட மெய்யடியார் ள் ஆழ்வார்கள் எனப்பட்டனர். இறைவனிடம் தம்மை முற்றாக ஒப்படைத்துப் பக்தியிலாழ்ந்த தன்மையினால் ஆழ்வார்கள் என அழைக்கப்பட்டனர். இந்த ஆழ்வார் பெருமக்களால் அருளிச் செய்யப்பட்ட பாடல் தொகுதியே நாலாயிரத் திவ்ய பிரபந்தம் என அழைக்கப்படுகின்றது.

### தசாவதாரம்

தம்மை வழிபடுபவர்க்கு அருள் செய்யும் பொருட்டுக் கண்ணன் மச்சம், கூர்மம், வராகம், நரசிம்மம், வாமனர், பரசுராமர், இராமர், பலராமர், கிருஷ்ணர், கல்கி என்று தசாவதாரம் எடுத்ததாக வரலாறு. ஆகவே இன்னல் போக்கி, இடுக்கண் களைந்து, துன்பந்துடைத்துப் பாவம் விலக்கும் மகாவிஷ்ணு எமக்குக் கண்கண்ட கடவுளாவார். அவரது நாம மகிமை சொல்லில் அடங்காதது.

### நலந்தரும் நாம மகிமை

''நாமம் பல சொல்லி
நாராயணாவென்று
நாமங் கையால் தொழுதும்
நல்நெஞ்சே- வா மருவி
மண்ணுலகம் உண்டுமிழ்ந்த
வண்டறையும் தண் துழாய்க்
கண்ணனையே காண் கநம்
கண்''

என்று பேயாழ்வார் கூறுவதுபோல அவன் தான் நமது காத்தற் கடவுள். எனவே மகாவிஷ்ணுவின் பாத கமலங்களைப் பணிந்து பாதக மலம் நீங்கப்பெற்று உலகில் உய்தி அடையலாம். நலந்தரும் நாராயணனின் நாமம் நமது பிறவிப் பிணியை நீக்கி முத்தி தரவல்லது.

### அருட் பொலிவு மிக்க விழாக்கள்

வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் கோயில்திருவிழாக்கள் யாவும் அருட் பொலிவு மிக்கவை. அத்தகைய நல் விழாப் பொலிவு காணக் கொடுத்து வைத்திருக்க வேண்டும். ''ஓம் நமோ நாராயணாய'' என்று உச்சரித்தாலே பாவங்கள் விலகிவிடும். துன்பங்கள் பறந்தோடிவிடும். கிரஹதோஷமும் நீங்கி விடும்

'அதர்மம் குன்றாது தழைத்தோங்கி தர்மம் குன்றிப் போகும் காலத்தில் யுகந்தோறும் நான் அவதாரஞ் செய்வேன்' என்று பகவான் பகவத் கீதையில் கூறியிருக்கின்றார். எனவே துன்பங்களிலிருந்து எமைக் காப்பாற்றவேண்டுமென்று இன்று மஹோற்சவம் ஆரம்பமாகும் வண்ணை ஸ்ரீ வெங்கடேச வரதராஜப் பெருமானைத் துதி செய்து வணங்கி பேரின்பப் பெருவாழ்வையெய்தி பூவுலகில் உய்தி பெறுவோமாக.

''வேத நூற் பிராயம் நூறு
மனிசர் தாம் புகுவரேனும்
பாதியு முறங்கிப் போகும்
நின்ற திற் பதினையாண்டு
பேதை பாலகனதாகும்
பிணி பசி மூப்புத் துன்பம்
ஆதலாற் பிறவி வேண்டேன்
அரங்கமா நகருளானே!'

# நேர்த்தியை நிறைவேற்ற அடித்த சிதறு தேங்காய் தாக்கியதால் பெண்ணின் கண் பறிபோனது!

யாழ்ப்பாணம், செப், 18

கடவுள் நேர்த்தியை நிறைவேற்ற அடித்த தேங்காய் கண்ணில் தாக்கியதால், வயோதிபப்பெண் ஒருவர் இடது கண்பார்வையை இழந்தார்.

கடந்த மாதம் 17ஆம் திகதி இடம்பெற்ற இந்த விபத்தில் கண்ணில் பாதிப்புக்குள்ளானவரின் இடதுகண் சுமார் ஒரு மாதத்தின்பின் யாழ். ஆஸ்பத்திரியில் அகற்றப்பட்டது

நுணாவிலில் இருந்து இடம்பெயர்ந்து சுழிபுரத்தில் வசித்து வரும் அழகரட்ணம் கனகபூரணம் (வயது 65) என்பவரே கண்ணை இழந்தவராவார்.

வருடாவருடம் செய்துவந்த நேர்த்திக்கடனை நிறைவு செய்யும் பொருட்டு நுணாவில் அம்மன் கோயிலில் இருந்து இவர் நல்லூருக்கு காவடி எடுப்பது வழமை. இம்முறையும் காவடியுடன் வந்து தேங்காய் அடிக்க குனிந்த போது விபரீதம் நிகழ்ந்து விட்டது. இவருக்கு அருகில் மற்றொருவர் அடிக்க ஓங்கிய தேங்காய் கண்ணில் அடித்துத் தாக்கியது. இதனால் கண்ணில் உட்காயம் அடைந்த நிலையில் இவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

எனினும் சிகிச்சை பலனளிக்காத நிலையில் கடந்த வார இறுதியில் சத்திர சிகிச்சை மூலம் பாதிக்கப்பட்ட கண் அகற்றப்பட்டது.

(க-15)

# பல்கலைக்கழக அனுமதி கிடைக்காத மாணவருக்கு தொழில் பயிற்சி வழங்க ஆலோசனை நிலையம்

## யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்படும்

யாழ்ப்பாணம், செப். 18

பல்கலைக்கழக அனுமதி கிடைக்காத மற்றும் ஜி. சீ. ஈ. உயர்தர, சாதாரணதர பரீட்சைகளில் தோற்றிய மாணவர்களுக்குப் பொருத்தமான தொழில்நுட்பக் கல்வியையும் தொழிற் பயிற்சியையும் வழங்குவதற்கான ஆலோசனை நிலையம் ஒன்று விரைவில் யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

அடுத்த ஆண்டு ஆரம்பத்தில் இந்த நிலையம் யாழ். தொழில்நுட்பக் கல்லூரியின் ஒரு பகுதியில் அரம்பிக்கப்படவுள்ளதாக வடக்கு — கிழக்கு தொழில்நுட்பக் கல்லூரிகளின் வலயம் நான்கின் பிரதிப் பிராந்தியப் பணிப்பாளர் ஆர். யோகராஜன் தெரிவித்துள்ளார்.

தொழில்நுட்பக் கல்லூரியில் பயிற்சியை நிறைவு செய்த மாணவர்களுக்கு வெளிநாடுகளில் தொழில் வாய்ப்பு மற்றும் உள்ளூர் நிறுவனங்களில் வேலை வாய்ப்பு ஆகியவற்றையும் இந்த நிலையத்தின் ஊடாகப் பெற்றுக்கொள்ள முடியும்.

கொழும்பில் தனது செயற்பாட்டை ஆரம்பித்துள்ள இந்த நிலையத்தின் ஊடாகவே மேற்படி வேலை வாய்ப்புகள் தொடர்பான விடயங்கள் கையாளப்படும் எனவும் இதற்கான விண்ணப்பப் படிவங்களை அடுத்த மாதமளவில் யாழ். தொழில்நுட்பக் கல்லூரியில் பெற்றுக்கொள்ளலாம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(க-10-ரி)

# 52 பேருக்கு சகாயநிதி

தொல்புரம் — மூளாய் ஐக்கிய பரஸ்பர சகாயநிதிச் சங்கத்தினர் வரும் நிதியாண்டில் 52 பேருக்கு மரண சகாயமாகவும், சீவிய சகாயமாகவும் வழங்கவுள்ளனர். சென்ற ஆண்டில் மரணித்தவர் எண்ணிக்கை குறைவாக இருந்ததால் சீவிய சகாயத்தை முப்பதுக்கு மேற்பட்டவர்கள் பெற்றுள்ளனர். (க-28)


# பருத்தித்துறை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து) பருத்தித்துறை

## கேள்வி அறிவித்தல்

கீழ்வரும் வேலைக்கான கேள்விகள் பரு. பல நோ. கூ. சங்க பொது முகாமையாளரால் 2001 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 01 ஆம் திகதி திங்கட்கிழமை (01-10-2001) முற்பகல் 11.00 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும். பெறப்பட்ட கேள்விகள் உடனடியாகத் திறக்கப்படும்.

01. நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தில் இக்ராட் (ICTAD) கட்டடங்கள் நிர்மாணிப்பதற்கு கீழே குறிப்பிடப்படும் தரவுகளையுடைய அல்லது அதற்கு மேல் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்கள் மட்டும் கேள்விப் பத்திரங்கள் கோருவதற்கு தகுதியுடையோராவர்.
02. ஒப்பந்தப் பத்திரங்களைப் பெறுவதற்கு முன்னர் நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தினரால் வழங்கப்பட்டதும், இற்றைவரை செய்யப்பட்ட வேலைகளின் விவரங்கள் அடங்கியதுமான பதிவுப் புத்தகத்தை அலுவலகத்தில் சமர்ப்பித்தல் வேண்டும்.
03. தகுதி உடையோர் மட்டும் கீழ்க்காணும் அட்டவணைப் பிரகாரம் உரிய கட்டணங்களை பரு. பல நோ. கூ. சங்க தலைமை அலுவலகத்தில் செலுத்தி பற்றுச் சீட்டைப் பெற்று கேள்விப் பத்திரங்களை 2001 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 01 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணிவரை பெற்றுக் கொள்ளலாம்.

| வேலை விவரம் | பதிவு செய்யும் தரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத படிவக் கட்டணம் (பொ.சே.வ. உட்பட) |
|---|---|---|---|
| பரு. பல நோ. கூ. சங்க தலைமைக் காரியாலயம், களஞ்சியம் கட்டுதல் | எம் — 08 | 10,000/- | 500.00 |

04. கேள்வி கோருபவர் ஒருவருக்கு ஒரு தொகுதி ஆவணங்கள் மட்டும் விநியோகிக்கப்படும்.
05. கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரிசீலிக்கலாம். மேலதிக விவரங்களை பருத்தித்துறை பல நோ. கூ. சங்கத் தலைமைக் காரியாலயத்தில் பொது முகாமையாளரிடம் வேலை நாள்களில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

பொது முகாமையாளர்,
பரு. பல நோ. கூ. சங்கம்.

பரு. பல நோ. கூ. சங்கம் (வ/து),
தம்பசிட்டி வீதி,
பருத்தித்துறை.

(சி/18298)


# யாழ். பல்கலைமாணவருக்கான மகாபொல வைபவம் சனியன்று

யாழ்ப்பாணம், செப். 18

யாழ். பல்கலைக்கழகத்தின் 2000/2001 கல்வியாண்டு மாணவர்களுக்கான மகாபொல புலமைப் பரிசில் வழங்கும் வைபவம் எதிர்வரும் 22 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு துணைவேந்தர் பேரா. பாலசுந்தரம்பிள்ளை தலைமையில் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

புலமைப்பரிசில் பெறுவதற்குத் தகுதியுள்ள மாணவர்களுக்கான அழைப்பிதழ்கள் தபாலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. கிடைக்காத மாணவர்கள் பல்கலைக்கழக நலச்சேவைக் கிளையுடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

(க-10-ரி)

உதயன்

## கால் தடம் போடும் கூட்டு அணிகள்!

தருகிகான் அரசு ஒருவருட கால ஆட்சியில் தொடர்வதற்கு இணங்கி, தோளில் கைபோட்டுக் கொண்டு நடை பயிலும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியும், ஜனதா விமுக்திப் பெரமுனவும் (ஜே.வி.பியும்) மறைவில் ஒன்றுக்கொன்று கால்தடம் போடும் நடவடிக்கைகளிலும் மும்முரமாக இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தற்போதைய பொ.ஐ.முன்னணி அரசு ஒருவருட காலத்துக்கு மட்டும் ஆட்சியில் தொடர்வதற்கு ஆதரவு வழங்க ஜே.வி.பி. முன்வந்தது. அந்த ஒரு வருடத்துக்குள் தான் விரும்பியதையெல்லாம் நடைமுறைப்படுத்திவிடச் செய்வது ஜே.வி.பியின் திட்டம். அதற்காகப் பல நிபந்தனைகளையும் அவற்றைச் செயற்படுத்தக் காலக்கெடுகளையும் விதித்தது அக்கட்சி.

அதில் முக்கியமானது தேர்தல் மற்றும் பொலீஸ்துறை உட்பட நான்கு துறைகளின் நிர்வாகங்களைக் கவனிப்பதற்கு தனித்தனி - சுயாதீன - ஆணைக்குழு நியமிப்பது.

இதனை உடனடியாக நியமிக்கத்தக்க வகையில் சட்டத் திருத்தங்களைக் கொண்டுவந்து, அந்த ஆணைக்குழுக்களையும் நியமிக்க வேண்டும் என்று ஜே.வி.பி. வற்புறுத்துகின்றது.

இந்த ஆணைக்குழுக்கள உடனடியாக நியமிக்கப்படுவதைப் பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.கவும் முழுமூச்சாக வரவேற்கின்றது.

இந்த ஆணைக்குழுக்கள் நியமிக்கப்பட்டுவிட்டால் - பொலீஸ் மற்றும் தேர்தல் சம்பந்தமான நிர்வாக நடவடிக்கைகள் சுயாதீன ஆணைக் குழுக்களின் கட்டுப்பாட்டின்கீழ் வந்துவிட்டால் - அதன்பின் எப்போது தேர்தல் நடந்தாலும் அது சுதந்திரமாகவும், சுயாதீனமாகவும், ஆளுங்கட்சியின் அச்சுறுத்தல்கள் இன்றியும் நடைபெறும் என்பது ஐ.தே.கவினதும் ஜே.வி. பியினதும் எதிர்பார்ப்பு; நம்பிக்கை.

எனவே இந்த ஆணைக்குழுக்களை அவசரமாக அமைக்கச் செய்யும் முயற்சியில் அந்த இரு கட்சிகளும் முனைப்பாக இருக்கின்றன.

அரசைத் தொடர்வதற்கு எப்படியும் ஜே.வி.பியின் ஆதரவைப் பெற்றுவிட வேண்டும் என்பதற்காக, நான்கு சுயாதீன ஆணைக்குழுக்களை உடனடியாக அமைப்பது உட்பட அது விதித்த சகல நிபந்தனைகளுக்கும் பொ.ஐ.மு. இணங்கியது.

ஆனால், தேர்தல், பொலீஸ் ஆகிய துறைகள் சார்ந்த நான்கு ஆணைக் குழுக்களும் உடனடியாக அமைக்கப்பட்டு - தங்கள் எதிர்பார்ப்பு நிறைவேறியதும் - தமது விருப்பப்படி சுயாதீனமாக தேர்தல் நடத்த வாய்ப்பு ஏற்பட்டதும் - அரசின் காலை ஜே.வி.பி. வாரிவிடும் என்று பொ.ஐ.மு. சந்தேகிக்கின்றது.

ஜே.வி.பியும் ஐ.தே.கட்சியும் சேர்ந்து இது தொடர்பாக இரகசியத் திட்டம் தீட்டியிருக்கலாம் என்றும் பொ.ஐ.முன்னணிக்குச் சந்தேகம்.

எனவே, சுயாதீன ஆணைக்குழுக்களை அமைக்கும் விடயத்தில் - தங்களின் மீது பிழையில்லாதவாறு காட்டிக்கொண்டு - விடயத்தைத் தள்ளிப்போடும் முயற்சியில் பொ.ஐ.முன்னணி இறங்கியிருப்பதாக ஜே.வி.பி. குற்றம் சுமத்துகின்றது.

நான்கு சுயாதீன ஆணைக்குழுக்களையும் அமைப்பதற்கு அரசமைப்பில் திருத்தம் செய்ய வேண்டும்.

அரசமைப்புக்குச் செய்யப்படும் திருத்தங்கள் நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பங்கு ஆதரவுடன் அல்லது அந்த ஆதரவோடு சர்வஜன வாக்கெடுப்பு மூலம் மக்கள் அனுமதி பெற்று மேற்கொள்ளப்படவேண்டும்.

இதில் எந்த வகையைப் பின்பற்றுவது என்பதைச் சம்பந்தப்பட்ட அரசமைப்புத் திருத்தத்தை பாசீலித்த பின்னர் உயர் நீதிமன்றம் முடிவு செய்து அறிவிக்கும்.

எனவே -

ஜே.வி.பியின் வற்புறுத்தலின்படி, இந்த அரசமைப்புச் சட்டத் திருத்தத்தை அவசரச் சட்ட நகலாகக் கொண்டுவரும் அதேசமயம் -

சர்வஜன வாக்கெடுப்பு வைத்துத்தான் இந்தத் திருத்தத்தைச் செய்ய முடியும் என்ற வகையில் உயர் நீதிமன்றத் தீர்ப்பு அமையக் கூடியதாகச் சட்ட நகலைத் தயாரித்து, சட்ட நகல் நடைமுறைக்கு வருவதை - தன்னில் பிழையில்லாமல் - நீதிமன்ற நடவடிக்கை மூலம் - பிற்போட வைப்பதில் அரசுத்தரப்பு ஈடுபட்டிருப்பதாக - அதற்காகச் சூழ்ச்சி செய்வதாக - ஜே.வி.பி. குற்றஞ்சுமத்துகின்றது.

அதாவது ஜே.வி.பியும் பொ.ஐ. முன்னணியும் பகிரங்கமாகத் தோளில் கைபோட்டுக்கொண்டு, மறைவில் ஆளுக்கு ஆள் கால்தடம் போடும் முயற்சியில் இறங்கியிருக்கின்றன. யார் விழப்போகின்றார் என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

### நோயாளியை பராமரித்து வந்த
# ஆஸ்பத்திரி ஊழியர் இருவருக்கு விசர்நாய்க் கடிக்கான தடுப்பூசி!

யாழ்ப்பாணம்,செப்.18

விசர்நாய்க் கடியினால், நீர் வெறுப்பு நோய்க்கு இலக்கான ஒருவரைப் பராமரித்த ஆஸ்பத்திரி ஊழியர் இருவர் 'ஏ.ஆர்.வி.' என்ற விசர்நாய்க்கடிக்கான தடுப்பூசி ஏற்றுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

விசர்நாய்க்கடி நோய்க்குள்ளாகி யாழ்.ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த நோயாளி பரிசாரகர் ஒருவரின் கண், முகம் மற்றும் உடல் பகுதிகளில் தனது எச்சிலைத் துப்பியதனால் அந்நோய் இவரையும் தாக்கலாம் என்ற வைத்திய நிபுணரின் ஆலோசனையின் பேரில் 'ஏ.ஆர்.வி.' தடுப்பூசி மருந்து போட ஆரம்பித்துள்ளார்.

இதேவேளை அந்நோயாளி பாவித்த கட்டில், அலுமாரிகளைத் தொற்றுநீக்கிச் சுத்திகரித்துக்கொண்டிருந்த ஊழியர் ஒருவர் அந்நோயாளி துப்புவதற்காகப் பாவித்த துப்பல் போத்தல் உடைந்து கையில் காயத்தை ஏற்படுத்தியிருப்பதால் அவருக்கும் 'ஏ.ஆர்.வி' தடுப்பூசி மருந்தைப் போடும்படி ஆலோசனை வழங்கப்பட்டது.

இதற்கமைய பாதிப்பிற்குள்ளான பரிசாரகர் எஸ்.பொன்னுத்துரை, சாதாரண தொழிலாளி ஜெயராசா ஆகிய இருவரும் தடுப்பூசி மருந்து போடத் தொடங்கியுள்ளனர். (க-15)

### பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், செப்.18

யாழ்.மாவட்ட தனியார் பாரவூர்தி உரிமையாளர்கள், சாரதிகள் மற்றும் ஊழியர்கள் நலன்புரிச் சங்கத்தின் ஆண்டுப் பொதுக்கூட்டமும புதிய நிர்வாகத் தெரிவும் எதிர்வரும் 23ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணிக்கு யாழ்.வை.எம்.சி.ஏ.மண்டபத்தில் வீ.குமாரசாமி தலைமையில் நடைபெறவுள்ளது.(க-10)

### நாளை காங்கேசன் செல்கிறார்

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலக அதிகாரி என். ஜீவேஸ்வரா நாளை புதன்கிழமை காங்கேசன்துறை கைதிகள் தடுப்பு முகாமுக்குச் சென்று அங்குள்ள கைதிகளைப் பார்வையிடவுள்ளார்.

கைதிகளின் உறவினர்களால் அவர்களுக்கு வழங்கப்பட்ட கடிதங்கள் மற்றும் பொருள்களையும் அவர் எடுத்துச் சென்று கையளிப்பார். (க-10)

### சுழிபுரம் பகுதியில் விதைப்பு ஆரம்பம்

சுழிபுரம்,செப்.18

சுழிபுரம் பகுதி விவசாயிகள் மழை பெய்யாது விட்டாலும் தமது பருவகால விதைப்பை இவ்வாரம் முதல் ஆரம்பித்துள்ளனர். (க-10)

## நாட்டு நடப்பு

உண்டி - VII

பூட்டனார் தொண்ணூறாண்டு காலம்
புகழுடன் வாழ்ந்து மாள
பாட்டனார் எண்பதாண்டு மட்டும்
பக்குவமாய் வாழ்ந்தார் மண்ணில்
தந்தையோ ஐம்பதாண்டே
தரணியில் வாழ்ந்து சாக
மைந்தனோ நாற்பதாண்டுகளே
மாநிலம் தன்னில் வாழ்ந்தான்
உண்டியை மாற்றாவிட்டால்
உன் வாழ்வும் குறுகும் காண்பாய்!

*- விகடகவி.*

# பாரம்பரிய கலைகளை ஊக்குவிப்பதே சாகித்திய விழாக்களின் நோக்கமாகும்

### நெடுந்தீவு நிகழ்வில் உதவி அரச அதிபர் உரை

பிரதேச ரீதியாக மறைந்திருக்கும் பாரம்பரிய கலைகளுக்கு புத்துயிர் அளித்து ஊக்குவிப்பதே சாகித்திய விழாக்களின் நோக்கம். இதனாலேயே நாடளாவிய ரீதியில் ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவுகள் தோறும் சாகித்திய விழாக்கள் நடத்தப்படுகின்றன.

- இவ்வாறு தெரிவித்தார் நெடுந்தீவு மற்றும் ஊர்காவற்றுறைப் பிரதேசங்களுக்கான உதவி அரசாங்க அதிபர் ஜே.எக்ஸ்.செல்வநாயகம்.

நெடுந்தீவு பிரிவுக்கான பிரதேச சாகித்திய விழா அண்மையில் உதவி அரசாங்க அதிபர் பணிமனை முன்றிலில் உதவி அரச அதிபர் ஜே.எக்ஸ்.செல்வநாயகம் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வுக்குத் தலைமை வகித்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தமது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழ் மக்களின் பாரம்பரிய கலை வடிவங்கள் பலவும் இன்று வழக்கொழிந்துவருகின்றன என்றே கூற வேண்டும். கரகம், காவடி முதலியன இவற்றுள் முக்கியமானவை.

எமது இளைஞர்களும், யுவதிகளும் இன்று பாரம்பரிய கலை வடிவங்களைக் கற்பதில் பெரிதும் அக்கறை காட்டுவதில்லை. அதுமட்டுமன்றி இத்தகைய கலைகளைக் கற்பதைக் கௌரவக் குறைவாகக் கருதும் நிலையும் இவர்கள் மத்தியில் காணப்படுகின்றது. இந்த வகையில் இளைஞர்கள், யுவதிகள் மத்தியில் கலையார்வத்தை ஏற்படுத்தவும், பாடசாலை மாணவர்கள் மத்தியில் கலைகள் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையிலும் பிரதேச ரீதியாக சாகித்திய விழாக்கள் நடத்தப்படுகின்றன.

இரவிரவாக நிகழ்ச்சிகளை நடத்துவது என்பது இன்று குடாநாட்டில் உள்ள ஒரு முக்கிய பிரச்சினை. ஆனால் நெடுந்தீவில் மிகப்பெரிய அளவில் - இரவிரவாக - விழாக்கள் நடத்தப்படுகின்றன.

இவ்விதம் நெடுந்தீவின் அமைதியான சூழலுக்கும், கலை வளர்ச்சிக்கும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியினர் ஆற்றிவரும் பங்களிப்பு என்றும் நினைவுகூரத்தக்கதாகும் - என்றார்.

நெடுந்தீவுப் பிரதேச சபைத் தலைவர் புலவர் ஏ.டபிள்யூ.அரியநாயகம் தனது உரையில்:-

இளைஞர்கள், யுவதிகள் மத்தியில் மறைந்திருக்கும் கலையம்சங்களை வெளிக்கொணரும் வகையில் சந்தர்ப்பங்கள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டும்.

உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டை உலகறியச் செய்த தவத்திரு.தனிநாயகம் அடிகளார் பிறந்த நெடுந்தீவு மண்ணிலே வசிக்கும் நாம் தமிழ்மொழியை - அதன் பண்பாட்டைப் பேணிப் பாதுகாப்பதில் கூடிய கவனம் செலுத்தவேண்டும்

இனிய தமிழ்மொழியை எமது உயிராகப் போற்றி மறைந்து கிடக்கும் கலையார்வத்தைக் கட்டியெழுப்புவதற்கு அனைவரும் திடசங்கற்பம் பூணவேண்டும் - என்றார்.

இந்நிகழ்வில் ஈ.பி.டி.பியின் நெடுந்தீவுப் பொறுப்பாளர் க.நவநீதன் (மோகன்) பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்டு சாகித்திய விழாப் போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்குப் பரிசில்களை வழங்கினார். நெடுந்தீவு உதவி அரச அதிபர் பணிமனை பிரதம எழுதுநர் எஸ். கடோற்கஜன் வரவேற்புரை நிகழ்த்தினார். நெடுந்தீவுப் பகுதிக்கான கலாசார உத்தியோகத்தர் நிகழ்ச்சிகளை நெறிப்படுத்தினார். (க-7)

# இலக்கிய நூல் போட்டியில் பரிசு பெறுவோர் விவரம்

யாழ்ப்பாணம்,செப்.18

வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் "இலக்கிய நூல் பரிசுப் போட்டி - 2000" முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

பரிசுபெறும் நூல் ஆசிரியர்களின் பெயர் விவரம் (நூல் விவரம் அடைப்புக் குறிக்குள்) வருமாறு:-

☆நாவல் - ஜுனைதா சரீப் (ஜனநாயகர்கள்), முல்லைமணி வே.சுப்பிரமணியம் (கமுகஞ்சோலை).

☆ சிறுகதை - அமரர் அ.கைலாசநாதன் (அங்கயன் கதைகள்), த.கலாமணி (நாள்கள், கணங்கள் நமது வாழ்க்கை).

☆ கவிதை - மண்டூர் தேசிகன் (அக்கினி நாளகள்), எஸ்நலீம் (கடைசி சொட்டு உசிரில்).

☆ நாடகம் - செல்லையா மெற்றாஸ்மயில் (மண்வாசனையில் மூன்று நாடகங்கள்).

☆ கவிதைநாடகம் - சாம்பிரதீபன் (நீதியின் இருக்கை).

☆ சிறுவர் இலக்கியம் - ஓ.கே. குணநாதன் (நரியின் தந்திரம்), உதயச் சந்திரன் (சிறுவர் நாடகங்கள்).

☆ சமய இலக்கியம் - அனுவை நாகராஜன் (பட்டரின் அபிராமி மான்மியம்).

☆ ஆய்வு இலக்கியம் - ப.புஸ்பரத்தினம் (தொல்காப்பியர் நோக்கில் இலங்கைத் தமிழர் பண்பாடு), பேராசிரியர் பா.அருணாசலம் (தமிழர் வரலாற்றில் நாவலின் தோற்றமும் வளர்ச்சியும்), பேராசிரியர் கா.குகபாலன் (இலங்கைப் பழங்குடிகள்).

☆ பல்துறை இலக்கியம் - காரை சுந்தரம்பிள்ளை (வடஇலங்கை நாட்டார் அரங்கு), தம்பிஐயா தேவதாஸ் (பொன்விழா கண்ட சிங்களச் சினிமா), அருள்நந்தி (வேளாண்மைக் கல்விக்கு ஒரு விவரணம்), ஜி.நடேசன் (இலங்கையின் இன முரண்பாடுகள்).

இவர்களுக்கான பரிசில்கள் எதிர்வரும் 29ஆம் திகதி முதல் மாகாணக் கல்வி அமைச்சினால் திருகோணமலையில் நடத்தப்படவுள்ள தமிழ் இலக்கிய விழாவில் வைத்து வழங்கப்படும். (க-7)

### வலயக் கல்வி பணிப்பாளர்களுக்கு அறிவுறுத்தல்

யாழ்ப்பாணம்,செப்.18

பாடசாலைகளில் சேவை புரிவதற்காக நியமனம் செய்யப்பட்ட தொழிலாளர்கள் வலயக்கல்வி அலுவலகங்களிலும், வலயக்கல்வி அலுவலகங்களில் சேவைபுரிய நியமனம் செய்யப்பட்ட அலுவலகச் சிற்றூழியர்கள் பாடசாலைகளிலும் சேவை புரிய அனுமதிக்கக் கூடாது.

- இவ்வாறு வடக்குக் கிழக்கு மாகாணக்கல்வி அமைச்சுச் செயலாளர் சு.பரமேஸ்வரன் வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கு அறிவித்துள்ளார்.

இவ்விரு சேவைகளுக்குரிய சேவைப் பிரமாணக் குறிப்புக்களும் வெவ்வேறாக இருப்பதால் இச்சேவைகளுக்கான நியமனம், இடமாற்றம், பதவி உயர்வு என்பவை தனித்தனியாகவே அமையும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (க-51)

### நாளை

புரட்டாதி 03
புதன்கிழமை
திதி: துதியை
பிற்பகல் 12.36 வரை.
நட்சத்திரம் : அத்தம்
முற்பகல் 7.48 வரை.
சுபநேரம் : 4.33 - 6.03
ராகுகாலம் : 12.03 - 1.33
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

கௌரவத்துடன் ஏழையாய் இருப்பது அவமானத்துடன் செல்வனாய் இருப்பதிலும் சிறந்தது.

# குடத்தனையில் சாகித்திய விழா

யாழ்ப்பாணம், செப்.18

மருதங்கேணி பிரதேசத்தின் கலை, கலாசாரப் பேரவை நடத்தும் சாகித்திய விழா இன்று செவ்வாய்க்கிழமை குடத்தனை நூல் நிலையத்துக்கு அருகில் உதவி அரசாங்க அதிபரும், கலை கலாசாரப் பேரவையின் தலைவருமான வி.ப.வேலாயுதம்பிள்ளை தலைமையில் பகல், இரவு நிகழ்வாக இடம்பெறவுள்ளது.


இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக பருத்தித்துறை பிரதேச சபைத் தலைவர் ஐ.ஸ்ரீரங்கேஸ்வரனும் சிறப்பு விருந்தினர்களாக பளை பிரதேச செயலர் சு.புத்திசிகாமணி, பாரம்பரிய மேம்பாட்டுக் கழகச் செயலாளர் செ.மெற்றாஸ்மயில், ஓய்வு பெற்ற கிராம அலுவலர் ம.ஜோசெப் ஆகியோரும் கலந்துகொள்வர்.

பிற்பகல் 2 மணிக்கு நிகழ்வுகள் ஆரம்பமாகும். மாலை 6.30 மணிக்கு, பின்னர் கலை நிகழ்ச்சிகள் இடம்பெறும். (க-10)


கண்ணிகள் காத்திருக்கின்றன, கவனம்!



## 8ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 18 - 03 - 1947

மறைவு 16 - 09 - 1993

### அமரர் க.பரமானந்தன்

*(அதிபர், ஸ்ரீ லங்கா வித்தியாசாலை.)*

**எங்களை விட்டுப் பிரிந்தாலும் அப்பாவே!**
**தங்கள் நினைவலைகளிலிருந்து நாம் பிரியவில்லை!**
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

*குரும்பிலாவத்தை,*
*அல்வாய் வடக்கு.* (92395)

மனைவி,
ப.மிதிலா *(மகள்)*.

## தவறவிட்ட கைச்சங்கிலி

சாவகச்சேரி, செப்.18

உடுப்பிட்டி, தொண்டமானாறு சந்தியில் கண்டெடுக்கப்பட்ட கைச் சங்கிலி ஒன்று உடுப்பிட்டி வீரபத்திரர் கோயிலடியிலுள்ள சந்திரா தொலைத் தொடர்பு நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரிய வர்கள் ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-31)

## சாரணத் தலைவர் கூட்டம் இன்று

யாழ்ப்பாணம், செப்.18

யாழ்.மாவட்ட சாரணர் கிளைச் சங்கத்தின் ஏற்பாட்டில் சகல சாரணத தலைவர்களுக்குமான கூட்டம் இன்று செவ்வாய்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது. (ஐ)

## 9ஆவது பிறந்தநாள் வாழ்த்து

***(18-09-2001)***

### செல்வி ந.சஜந்தா

**ஊர்காவற்றுறை, கரம்பொன்னைச் சேர்ந்த**
**நகுலேஸ்வரன் தம்பதிகளின்**
அருந்தவப் புதல்வி

### சஜந்தா

தனது ஒன்பதாவது பிறந்தநாளை இன்று (18.09.2001) செவ்வாய்க்கிழமை தனது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகிறார். இவரை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் இறைவன் அருளால் சகல செளபாக்கியங்களும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

*கரம்பொன்,*
*ஊர்காவற்றுறை.* (92392)

சிவம் (அண்ணா).
ராதா (அக்கா).

# தேசிய போலியோ தடை மருந்து கொடுக்கும் தினங்கள் - 2001

## யாழ்.மாவட்டம்

**போலியோ நோயை முற்றாக இந்நாட்டிலிருந்து ஒழிக்கும் நோக்குடன் கடந்த ஆறு வருடமாக போலியோ சொட்டு மருந்து கொடுக்கப்பட்டு வருகின்றது. தென்னிலங்கையில் கூடிய முன்னேற்றம் காணப்பட்ட போதிலும் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் கீழ்க் குறிப்பிட்ட காரணங்களால் இதில் எதிர்பார்த்த முன்னேற்றம் காணப்படவில்லை.**

**(01) காலத்துக்குக் காலம் மக்கள் இடம்பெயர்வதால் பிள்ளைகளைத் தேடிக் கண்டுபிடித்து மருந்து கொடுப்பதில் உள்ள சிரமம்.**

**(02) இடம்பெயர்வு காரணமாக மக்கள் குறிப்பிட்ட இடங்களில் நெரிசலாக வாழ்கின்றபடியால் சுகாதாரத்தைப் பேணுவது குறைவாகக் காணப்படுகின்றது.**

**இக் காரணங்களால் வடக்கு - கிழக்கில் இந்நோய் மறைமுகமாக இருக்கலாமென ஐயப்பாடு உண்டு. எனவே இவ்வருடமும் செப்ரெம்பர் 22ஆம் திகதியும், ஒக்ரோபர் 20ஆம் திகதியும் இரு தடவைகள் (05) ஐந்து வயதிற்குட்பட்ட சகல பிள்ளைகளுக்கும் போலியோ மருந்து கொடுக்க சுகாதார அமைச்சுத் தீர்மானித்துள்ளது.**

**யாழ். மாவட்டத்திலுள்ள சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலுள்ள கீழ்க் குறிப்பிட்ட நிலையங்களில் போலியோ தடை மருந்து கொடுப்பதற்கான ஏற்பாடுகளை யாழ்.மாகாண பிரதிப் பணிப்பாளர் - சுகாதார சேவைகள் - மேற்கொண்டுள்ளார். இந்நிலையங்களில் காலை 8.00 மணிமுதல் மாலை 04.00 மணிவரை தடை மருந்து வழங்கப்படும். 05 வயதுக்குட்பட்ட பிள்ளைகளுக்கு முன்பு பல தடவைகள் கொடுக்கப்பட்டிருந்தாலும் இம்முறையும் கட்டாயமாக இது கொடுக்கப்பட வேண்டும் என வலியுறுத்தப்படுகின்றது. நூற்றுக்கு நூறு வீதமான பிள்ளைகளுக்குத் தடை மருந்து கொடுப்பதன் மூலம் இக்கொடிய நோய் எமது பிள்ளைகளுக்கு வராமல் தடுப்பது மட்டுமல்லாது எம் நாட்டிலிருந்தே முற்றாக இந் நோயை ஒழித்து விடவும் முடியும்.**

**சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு ரீதியாக சிகிச்சை நிலையங்களின் பெயர்ப் பட்டியல் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.**

### 01. சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, தெல்லிப்பழை

01. ஆரம்ப சுகாதார நிலையம், தாவடி.
02. ம.ம., இணுவில்.
03. இணுவில் மத்திய கல்லூரி.
04. ம.ம., உடுவில்.
05. மல்வம் சேச்.
06. உடுவில் மேற்கு அந்திரான்.
07. இராமநாதன் கல்லூரி, மருதனார்மடம்.
08. ம.ம., சுன்னாகம்.
09. யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி.
10. ம.ம.ம.ம., அளவெட்டி.
11. ஆ.சு.நிலையம், சங்குவேலி.
12. மல்லாகம் சிகிச்சை நிலையம் (தெல்லிப்பழை).
13. ம.ம., புன்னாலைக்கட்டுவன்.
14. ம.ம., ஏழாலை.
15. மயிலங்காடு சிகிச்சை நிலையம்.
16. ஏழாலை மாதர் சங்கம்.
17. ஏழாலை பிரதேச சபை.
18. வசாவிளான் சிகிச்சை நிலையம்.
19. ஆ.சு.நிலையம், குளமங்கால்.
20. ஆ.சு.நிலையம், ஈவினை.
21. பன்னாலை சிகிச்சை நிலையம்.
22. தாவடி காளி கோயிலடி.
23. இணுவில் கலாஜோதி வாசிகசாலை.
24. கல்லாரை.
25. பன்னாலை.

### 02. சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, பருத்தித்துறை

01. சோளன்கள் சிகிச்சை நிலையம்.
02. மணியகாரன் தோட்டம் பாடசாலை.
03. ஆதார வைத்தியசாலை, பருத்தித்துறை.
04. வல்லிபுரக்குறிச்சி கிராம அலுவலர் காரியாலயம்.
05. திக்கம் சிகிச்சை நிலையம்.
06. அல்வாய் பிரதேச சபை பணிமனை.
07. அத்தாய் விநாயகர் பாடசாலை.
08. வியாபாரிமூலை சிகிச்சை நிலையம்.
09. சென்.அன்ரனி சிகிச்சை நிலையம்.
10. மாதனை மாதர் சங்கம்.
11. கற்கோவளம் சிகிச்சை நிலையம்.
12. தம்பசிட்டி கதிரவேற்பிள்ளை சனசமூக நிலையம்.
13. பருத்தித்துறை மத்திய மருந்தகம்.
14. விக்கினேஸ்வரா சிகிச்சை நிலையம்.
15. வதிரி சிகிச்சை நிலையம்.
16. கப்பூது வாசிகசாலை.
17. கரவெட்டி மத்திய மருந்தகம் மகப்பேற்று மனை.
18. இராஜ கிராமம் சிகிச்சை நிலையம்.
19. கிழவித் தோட்டம் வாசிகசாலை.
20. கட்டைவேலி சனசமூக நிலையம்.
21. கோயிற்கடமை சனசமூக நிலையம்.
22. அம்பிகை பாலர் பாடசாலை.
23. உடுப்பிட்டி சனசமூக நிலையம்.
24. பாரதி சனசமூக நிலையம்.
25. இலகடி சனசமூக நிலையம்.
26. இமையாணன் மாதர் சங்கம்.
27. கலைமகள் பாலர் பாடசாலை.
28. உடுப்பிட்டி பிரதேச சபை.
29. மாவட்ட வைத்தியசாலை, வல்வெட்டித்துறை.
30. வளர்மதி பாலர் பாடசாலை, தொண்டமனாறு.
31. கொற்றாவத்தை அ.த.க., பாடசாலை.
32. பொலிகண்டி இ.த.க., பாடசாலை.
33. கொற்றாவத்தை அ.மி.த.க., பாடசாலை.
34. வல்வெட்டி இ.த.க., பாடசாலை.
35. அம்பன் அ.ம.த.க., பாடசாலை.
36. மணற்காடு பாலர் பாடசாலை.
37. குடத்தனை சிகிச்சை நிலையம்.
38. பொற்பதி வாசிகசாலை.

### 03. சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, யாழ்ப்பாணம்

01. சிறுவர் பூங்கா பாலர் பாடசாலை.
02. ஈச்சமோட்டை பாலர் பாடசாலை.
03. திருநகர் சனசமூக நிலையம்.
04. குருநகர் சிகிச்சை நிலையம்.
05. ஆ.வே. மாயா பாலர் பாடசாலை.
06. யூப்ளி மகப்பேற்று நிலையம் - 1.
07. யூப்ளி மகப்பேற்று நிலையம் - 2.
08. ஆயுர்வேதக் கல்லூரி.
09. போதனா வைத்தியசாலை.
10. கொட்டடி பாலர் பாடசாலை.
11. நாவலர் சிகிச்சை நிலையம்.
12. நாவாந்துறை றோமன் கத்தோலிக்க பாடசாலை.
13. சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம், கண்டி வீதி.
14. காந்தி சனசமூக நிலையம், அரியாலை.
15. ஞானக்குழந்தை பாலர்பாடசாலை, சிவப்பிரகாசம் வீதி.
16. வள்ளுவன் சனசமூக நிலையம், வண்ணார்பண்ணை.
17. அங்கர் பாமசி முன்.
18. கந்தர்மடம் சிகிச்சை நிலையம்.
19. செட்டித்தெரு சனசமூக நிலையம், நல்லூர்.
20. நல்லூர் சிகிச்சை நிலையம்.
21. மூத்தவிநாயகர் சனசமூக நிலையம்.
22. வண்ணார்பண்ணை சிகிச்சை நிலையம்.

### 04. சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, மானிப்பாய்

01. சுற்றயல் கூறு, சங்கானை.
02. ஆரம்ப சுகாதார நிலையம், பண்ணாகம்.
03. மத்திய மருந்தகம், தொல்புரம்.
04. ஐக்கிய சங்கப் பாடசாலை, சுழிபுரம்.
05. மத்திய மருந்தகம், வட்டுக்கோட்டை.
06. வட்டுக்கோட்டை மத்திய கல்லூரி.
07. கிராமிய வைத்தியசாலை, வட்டுக்கோட்டை.
08. அராலி தெற்கு சரஸ்வதி மகா வித்தியாலயம்.
09. சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, மானிப்பாய்.
10. கிராமிய வைத்தியசாலை, பண்டத்தரிப்பு.
11. மத்திய மருந்தகம், இளவாலை.
12. சனசமூக நிலையம், மாசியப்பிட்டி.
13. மானிப்பாய் லயன்ஸ் கழகம்.
14. சனசமூக நிலையம், சுதுமலை.
15. ஆரம்ப சுகாதார நிலையம், சாவற்கட்டு.
16. ஆரம்ப சுகாதார நிலையம், முள்ளி, ஆனைக்கோட்டை.
17. வை.எம்.சி.ஏ.,நவாலி.

### 05. சுகாதார வைத்திய அதிகாரி, சாவகச்சேரி

01. மிருசுவில் வடக்கு பாடசாலை.
02. கச்சாய் பிரதேச சபை.
03. மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம்.
04. கைதடி வடக்கு அம்பிகா மாதர் சங்கம்.
06. கைதடி தெற்கு கமநல நிலையம்.
06. வரணி ம.ம.ம.ம.

### 06.சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, கோப்பாய்

01. இடைக்காடு சிகிச்சை நிலையம்.
02. சுற்றயல்கூறு அச்சுவேலி.
03. மத்திய மருந்தகம் புத்தூர்.
04. ஆரம்ப சுகாதார நிலையம், வாதரவத்தை.
05. சிறுப்பிட்டி சிகிச்சை நிலையம்.
06. அச்செழு சிகிச்சை நிலையம்.
07. நீர்வேலி சிகிச்சை நிலையம்.
08. ஊரெழு சிகிச்சை நிலையம்.
09. உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்.
10. சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, கோப்பாய்.
11. மாதா கோவிலடி, இருபாலை.
12. கட்டப்பிராய் சிகிச்சா நிலையம்.
13. கல்வியங்காடு சைவப் பாடசாலை.
14. திருநெல்வேலி கலாமன்றம்.
15. மத்திய மருந்தகம், கொக்குவில்.
16. கிராமிய அபிவிருத்திச் சங்கம், கொக்குவில்.
17. மத்திய மருந்தகம் மகப்பேற்று மனை, கோண்டாவில்.
18. சூசையப்பர் கோவிலடி.
19. கிராமசபை, புத்தூர்.
20. ஆரம்ப பாடசாலை சைவத்தமிழ், உரும்பிராய்.
21. செருக்கப்புலம் அன்னங்கை சிகிச்சை நிலையம், கோண்டாவில்

### 07.சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, ஊர்காவற்றுறை

01. மாவட்ட வைத்தியசாலை, ஊர்காவற்றுறை.
02. தம்பசிட்டி சனசமூக நிலையம்.
03. மெலிஞ்சிமுனை சேச்.
04. ஆரம்ப சுகாதார நிலையம், புளியங்கூடல்.
05. ஆரம்ப சுகாதார நிலையம், நாரந்தனை.
06. சுற்றயல்கூறு காரைநகர்.
07. களபூமி கிராம அலுவலர் காரியாலயம்.
08. வாரிவளவு ஆரம்பப் பாடசாலை.
09. சுற்றயல்கூறு அனலைதீவு.
10. ஆரம்ப சுகாதார நிலையம், எழுவைதீவு.
11. கிராமிய வைத்தியசாலை, வேலணை.
12. சாட்டி மாதா சேச்.
13. பராசக்தி வித்தியாலயம்.
14. மண்டைதீவு.
15. மாவட்ட வைத்தியசாலை, புங்குடுதீவு.
16. சுற்றயல்கூறு, நயினாதீவு.
17. மாவட்ட வைத்தியசாலை, நெடுந்தீவு.
18. நெடுந்தீவு மேற்கு - நிலையம்.
19. சுப்பிரமணியம் வித்தியாலயம்.

(C/18308)

**மாகாண பிரதிப் பணிப்பாளர்,**
**சுகாதார சேவைகள், யாழ்ப்பாணம்**



# எம் நாட்டின் அனைத்துத் தலைவர்களும் ஒன்று சேர்ந்து சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீள ஆரம்பிக்க வேண்டுமென நீங்கள் விரும்பினால், செப்டம்பர் 19 ஆம் திகதி மு.ப 11.55 க்கு உங்கள் வீடுகள், வேலைத்தலங்களிலிருந்து வெளியே வந்து நம் நாட்டின் ஏனைய பிரஜைகளுடன் கைகோர்த்து ஒன்றிணையுங்கள்.

## செப்டம்பர் 19ல் கைகோர்த்து ஒன்றிணைவோம்.

**ஸ்ரீலங்கா First**

இன்றே செய்வோம் அன்றேல் என்றும் இல்லை

Sri lanka First என்பது முக்கிய தனியார் வர்த்தகத் நிறுவனங்களின் அரசியல் சார்பற்ற ஓர் அமைதிக் குழு: இலங்கை வர்த்தக சம்மேளனம், பியகம ஏற்றுமதி வலய உற்பத்தியாளர் ஒன்றியம், இலங்கை சரக்கு அனுப்புவோர் ஒன்றியம், கொழும்பு தேயிலை வர்த்தகர்கள் ஒன்றியம், கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலய உற்பத்தியாளர்கள் ஒன்றியம், இலங்கை IATA முகவர்கள் ஒன்றியம், இலங்கை கைத்தொழிலாளர்கள் ஒன்றியம், இலங்கை அப்பரல் உற்பத்தியாளர்கள் ஒன்றியம், இலங்கை உல்லாசப் பயண ஏற்பாட்டாளர்கள் ஒன்றியம், இலங்கை ஆடை வாங்கும் அலுவலர்கள் ஒன்றியம், இலங்கை ஏற்றுமதியாளர்கள் ஒன்றியம், இலங்கை உல்லாசப் பயண ஹோட்டல்கள் ஒன்றியம், இலங்கை பிரயாண முகவர்கள் ஒன்றியம்.

புள்ளி விபரம் : மத்திய வங்கி, தேசிய சமாதான பேரவை, மார்க்கா நிறுவனம்.

(C/18299)

இதனை வெட்டித் தொங்கவிடவும் / போட்டோ பிரதிகளை எடுத்து விநியோகிக்கவும்.



"யுத்தம் என்றால் நித்தம் துன்பம்.
போரினால் நாம் காணும் பயன்,
அனர்த்தங்களும் அழிவுகளுமே.
சமாதானம், தானங்கள் எல்லாவற்றிலும்
அதி உயர்ந்தது. அதனை
வழங்குபவர்களும் பெறுபவர்களும்
பாக்கியசாலிகள். சமாதானம்
தலை சிறந்த மனித விழுமியமாகும்.
அது இறைவனால் மனித குலத்திற்கு
வழங்கப்பட்ட கொடைகளுள்
அதி சிறந்தது. வாழ்க்கைக்கு
உயிர்ப்பு, இன்பம், உய்வு, உயர்வு
என்பவற்றைத் தரவல்லது சமாதானம்.
பகைமை உணர்வை மறப்போம்.
அமைதியுடன் வாழத் திடசங்கற்பம்
பூணுவோம். ஆதலினால் அனைவரும்
ஒன்றுபட்டுக் கை கோர்ப்போம்."

கலாபூஷணம் குமாரசாமி சோமசுந்தரம்.

## செப்டம்பர் 19ல் மு.ப 11.55 ற்கு பிரதான வீதி ஒன்றிற்கு வந்து கைகோர்த்து ஒன்றிணைவோம்.


# ஸ்ரீலங்கா First
இன்றே செய்வோம் அன்றேல் என்றும் இல்லை

Sri lanka First என்பது முக்கிய தனியார் வர்த்தகத் நிறுவனங்களின் அரசியல் சார்பற்ற ஓர் அமைதிக் குழு: இலங்கை வர்த்தக சம்மேளனம், பியகம ஏற்றுமதி வலய உற்பத்தியாளர் ஒன்றியம், இலங்கை சரக்கு அனுப்புவோர் ஒன்றியம், கொழும்பு தேயிலை வர்த்தகர்கள் ஒன்றியம், கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலய உற்பத்தியாளர்கள் ஒன்றியம், இலங்கை IATA முகவர்கள் ஒன்றியம், இலங்கை கைத்தொழிலாளர்கள் ஒன்றியம், இலங்கை அப்பரல் உற்பத்தியாளர்கள் ஒன்றியம், இலங்கை உல்லாசப் பயண ஏற்பாட்டாளர்கள் ஒன்றியம், இலங்கை ஆடை வாங்கும் அலுவலர்கள் ஒன்றியம், இலங்கை ஏற்றுமதியாளர்கள் ஒன்றியம், இலங்கை உல்லாசப் பயண ஹோட்டல்கள் ஒன்றியம், மனிதாபிமான வள தொழில்சார் தகைகள் ஒன்றியம், இலங்கை பிரயாண முகவர்கள் ஒன்றியம்.

இணையத் தளம் : www.srilankafirst.com

(C/18300)

இதனை வெட்டித் தொங்கவிடவும் / போட்டோ பிரதிகளை எடுத்து விநியோகிக்கவும்.



"மும்மதங்களைச் சார்ந்து மொழியால் ஒன்றிணைந்த தமிழ் நெஞ்சங்களின் அன்பிற்குப் பாத்திரமானவன் என்ற நன்றி உணர்வுடன் வேண்டுகிறேன்....

வரலாறு, இனங்களுக்கிடையில் நடந்த யுத்தங்களை நமக்கு எடுத்தியம்புகின்றது. அதன் வடுக்களைத் தோண்டிப் புரையோட வைக்கும் வகையில் ஒவ்வொரு சந்ததியின் சிந்தனையிலும் பழிவாங்கும் உணர்வு புகட்டப்பட்டு வந்திருந்தால் இந்த உலகில் மாந்தர் இனம் என்றோ அழிந்திருக்கும். காலத்தின் நியதி தவறுகளை மறப்பது. நடந்தவை நடந்தவைகளாகட்டும். இனிவரும் நமது சந்ததி அமைதியில் தழைத்துச் சமத்துவம் கொண்ட புதுயுகம் படைத்திட ....
நாம் அனைவரும் ஒன்றிணைந்து
கை கோர்ப்போம்.
இதயங்களால் இணைந்திடுவோம்."

B.H. அப்துல் ஹமீட்

## செப்டம்பர் 19ல் மு.ப 11.55 ற்கு பிரதான வீதி ஒன்றிற்கு வந்து கைகோர்த்து ஒன்றிணைவோம்.

**ஸ்ரீலங்கா First**

இன்றே செய்வோம் அன்றேல் என்றும் இல்லை

Sri lanka First என்பது முக்கிய தனியார் வர்த்தகத் நிறுவனங்களின் அரசியல் சார்பற்ற ஓர் அமைதிக் குழு: இலங்கை வர்த்தக சம்மேளனம், பியகம ஏற்றுமதி வலய உற்பத்தியாளர் ஒன்றியம், இலங்கை சரக்கு அனுப்புவோர் ஒன்றியம், கொழும்பு தேயிலை வர்த்தகர்கள் ஒன்றியம், கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலய உற்பத்தியாளர்கள் ஒன்றியம், இலங்கை IATA முகவர்கள் ஒன்றியம், இலங்கை கைத்தொழிலாளர்கள் ஒன்றியம், இலங்கை அப்பரல் உற்பத்தியாளர்கள் ஒன்றியம், இலங்கை உல்லாசப் பயண ஏற்பாட்டாளர்கள் ஒன்றியம், இலங்கை ஆடை வாங்கும் அலுவலர்கள் ஒன்றியம், இலங்கை ஏற்றுமதியாளர்கள் ஒன்றியம், இலங்கை உல்லாசப் பயண ஹோட்டல்கள் ஒன்றியம், மனிதாபிமான வள தொழில்சார் தகைகள் ஒன்றியம், இலங்கை பிரயாண முகவர்கள் ஒன்றியம்.
இணையத் தளம் : www.srilankafirst.com

(C-18301)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## தவறிவிட்டது

புன்னாலைக்கட்டுவன் வடக்கு எனும் முகவரியைச் சேர்ந்த இராசரத்தினம் விமல் என்பவருடைய விசேட அ.அ. (இல.0906017912) நவக்கிரிக்கும் புத்தூர் சந்தைக்கும் இடையில் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் புத்தூர் வடக்கு, நவக்கிரி எனும் முகவரியில் தொடர்புகொள்ளவும். (92390)

துரைச்சாமி காந்திமதியின் தேசிய அ.அ. (இல.325932902V), விசேட அ.அ (இல.091006078) இரண்டும் ஓட்டுமட வீதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் இல. 314,கோயில் வீதி, நல்லூர் என்ற முகவரிக்கோ அல்லது T.P. NO 3409 இற்கோ தொடர்புகொள்ளவும். (92394)

சிவஞானம் ஞானகுமாரன் என்பவரது தேசிய அ.அ. (இல.680441154V) யும் விசேட அடையாள அட்டையும் வேலைக்கான ஆள் அடையாள அட்டையும் யாழ்ப்பாணத்தில் தவற விடப்பட்டுவிட்டன. கண்டெடுத்தவர்கள் சிறுப்பிட்டி வடக்கு, நீர்வேலி என்ற விலாசத்தில் ஒப்படைத்து உதவவும். சன்மானம் வழங்கப்படும். (92342)

பிள்ளையார் கோயிலடி, கோப்பாய் மத்தியைச் சேர்ந்த சின்னராசா செல்வராணியின் தே.அ.அட்டை (இல. 646311799V), வி.அ.அட்டை என்பன கோப்பாய் வைத்தியசாலைக்கும் பிள்ளையார் கோயிலுக்கும் இடையில் தவறி விட்டன. கண்டெடுத்தவர்கள் கிராம சேவையாளர், J/ 261 பணிமனையில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும். (92401)

## கைமாறிவிட்டது

NOKIA CORD LESS PHONE HANDSET கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வரும்போது கைமாறிவிட்டது. மாறி எடுத்தவர்கள் தயவுசெய்து 021-3280 என்னும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும். (92410)

## புறொயிலர் குஞ்சுகள்

PRIMA GREEN VALLEY புறொயிலர் குஞ்சுகள் விற்பனைக்குண்டு. சிவப்பு பேட்டுக் குஞ்சுகளும் இன்று பெற்றுக் கொள்ளலாம். வை.சிவகுமார் 'கிளீன் சொட்' பின்புறம், யாழ்.பஸ்நிலையம; இல.461, நாவலர் வீதி, அத்தியடியில 2 மணிக்குப் பின்பு தொடர்பு கொள்ளவும். (92402)

## விற்பனைக்கு

நொக்கியா HAND SET ரெலிபோன (அன்ரனாவுடன் கூடியது), மின்சாரம் சேமித்து வைக்கும் சாதனம் (U.P.S, 500W), ஜெனரேட்டர் 2500W (றொபின்), அ.அட்டை லெமறிங் பேப்பர், லமினேற்றிங் பேப்பர், 125,100,80,MICRON, விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- K.K.S. றோட், கொக்குவில் சந்தி, T.P. 2961. (92393)

## மாணவரிடையே போட்டிகள்

வடமராட்சி வலயக் கல்வித் திணைக்களம் 'போரூட்' ஒளி நிறுவனத்தின் அனுசரணையுடன் சர்வதேச தினங்கள் தொடர்பான போட்டிகளை பாடசாலை மாணவர்களிடையே நடத்தவுள்ளது.

இப்போட்டிகளுக்கான விண்ணப்பங்கள் பாடசாலை ரீதியாகக் கோரப்பட்டுள்ளன. (க-182)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



மண்ணில் 1914 - 06 - 12

விண்ணில் 2001 - 08 - 19

### த.சதாசிவம் பகவதிப்பிள்ளை

எங்கள் அன்பின் பிறப்பிடமே!
எங்கள் இதயப் பேரொளியே!
எங்கள் பாசத் திருவுருவே!
எங்கள் அறிவுப் பாசறையே!
எங்களை உயர்வுற வைத்தவரே!
எங்களைப் பிரிந்து நீர் சென்று
திங்கள் ஒன்று ஆனாலும் உம்மை
தினமும் நினைக்கும் எம் நெஞ்சே!

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

*திருமதி திலகவதி,*
*சின்னப்பா வீதி,*
*'விக்ன வாசம்'*
*நவாலி கிழக்கு, மானிப்பாய்.*
(92385)

# 31ஆம் நினைவு நாள்



மலர்வு 11 - 04 - 1924

உதிர்வு 19 - 08 - 2001

### திருமதி சச்சிதானந்தன் நவநீதம்

திதி: 18.09.2001

திங்கள் ஒன்று நிறைவில் நினைவஞ்சலி
தினம் ஒன்றே கழிந்ததுபோல் 30 நாள் போயிற்று
பத்துத் திங்கள் சுமந்தாய்
பல்லாண்டுகள் பாராட்டிச் சீராட்டி வளர்த்தாய்
நினைவிலும் கனவிலும் நீங்காது நிற்கிறாய்
எம்மை மறந்தாலும்
அம்மை உனை மறக்க ஆகாதே அம்மாவே!
உலகியற்கை இதுவானால் என் செயலாம்
தேறும் வழி தெரியோம்
தெய்வம் நீ தேற்றுவிப்பாய்
அன்னை ஆத்மசாந்தி பெற அஞ்சலி செய்வோம்

அன்பு மகள் (கொழும்பு),
மருமகன், மகள் (கனடா).

*நீர்வேலி தெற்கு,*
*நீர்வேலி.*
(92399)

## நவீன சந்தை கட்டடம் திறப்பு

கோண்டாவில்,செப்.18

60லட்சம் ரூபா செலவில் நல்லூர் பிரதேச சபையினால் கட்டப்பட்ட திருநெல்வேலி நவீன சந்தை கட்டடத் திறப்புவிழா நேற்றுமுன்தினம் நல்லூர் பிரதேச சபைத் தலைவர் க.மணிபல்லவராஜன் தலைமையில் இடம்பெற்றது.

16 கடைகள் இக்கட்டடத்தில் கட்டப்பட்டு திறந்து வைக்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வில் யாழ்மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் து.வைத்திலிங்கம், நெடுந்தீவு, கோப்பாய் பிரதேச சபைத் தலைவர்களான புலவா அரியரத்தினம், பூ.குணசிங்கம் உட்பட பலா கலந்துகொண்டு உரையாற்றினர். (க-86)

## துறைமுகத்தில் வழமை நிலை!

பருத்தித்துறை துறைமுகத்தில் ஒருநாள் இடைவெளிக்குப் பின்பு கப்பலில் இருந்து மீண்டும் நேற்றுப் பொருள்களை இறக்கும் ஏற்றும் பணிகள் வழமைபோல் இடம்பெறத் தொடங்கியுள்ளன.

'கோமாரி' கப்பலில் குடாநாட்டின் உற்பத்திப் பொருள்களான புகையிலை, வெங்காயம், பனம் பொருள்கள் மற்றும் பாவித்த அலுமினியப் பாத்திரங்கள் ஏற்றப்படுகின்றன. இன்று மாலை இந்தக் கப்பல் தென் பகுதிக்குப் புறப்படவுள்ளது.

'சஜிந்த' கப்பலில் இருந்து தனியாருக்கான அத்தியாவசியப் பொருள்களும், 'இந்துருவலி' கப்பலில் இந்தியாவில் இருந்து எடுத்துவரப்பட்ட 50 ஆயிரம் சிமெந்து பக்கெட்டுகளும இறக்கப்பட்டு வருகின்றன.(க-10-173)

## சாரணர் பாசறை விழா

வலிகாமம் தெற்கு,செப்.18

காங்கேசன்துறை மாவட்ட சாரணர் பாசறை விழாவும், குருளைச் சாரணர் வெளிக்கள நாளும் எதிர்வரும் 21, 22, 23 ஆம் திகதிகளில் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளன.

சாரணர் பாசறைவிழா 21ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பமாகி 23ஆம் திகதி மாலை 4 மணி வரையும் நடைபெறும்.

பாசறை நிகழ்வுகளாக தீப்பாசறை நிகழ்ச்சி, சமூகசேவை, பதிவேடுகள், அணிநடை, மைதானக் காட்சி, நிலைக் காட்சி, பாசறை பரிசோதனை என்பன இடம்பெறும்.

22ஆம் திகதி சனிக்கிழமை காலை 8 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை குருளைச் சாரணர் வெளிக்கள நிகழ்வுகள் நடைபெறும்.

இதில் விளையாட்டு, பாட்டு, களிப்பூட்டும் நிகழ்வுகள், கைப்பணி, குழுப பதிவேடு, மந்தைமூலை அணி நடை என்பன இடம்பெறும். (க-152)

## ஆலயத்தில் பக்தர் கூட்டம்

சரித்திரப் பிரசித்திபெற்ற வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கோயிலின் வருடாந்த மஹோற்சவத்தின் கொடியேற்றம் நேற்றுக்காலை 11 மணியளவில் மிகவும் பக்திபூர்வமாக இடம்பெற்றது.

இந்த உற்சவத்தில் பெரும் திரளான பக்தர்கள் கலந்துகொண்டனர். (க-10-173)

## அறிவொளி - NALLUR

A/L 2001 பரீட்சையில் தோற்றிய மாணவர்களுக்கான

**துரித மீட்டல் வகுப்புகள்**

ஆரம்பம்: 19.09.2001 3 p.m.

C.Maths: ***B.ரவீந்திரன்*** B.Sc.
PHYSICS: ***M.ஸ்பெல்மன்***
CHE.: ***N.கிருஷ்ணகுமார்*** B.Sc. (Hons)

**A/L 03 Com. Maths**

புதிய பிரிவுகள்
☆ வேக நேர வரைபு
☆ சமனிலி

ஆரம்பம்: 25.09.2001 4. p.m.

(92404)

## பூப்புனித நீராட்டு விழா அழைப்பு

நாள்:- நாளை (19-09-2001) புதன்கிழமை
நேரம்:- காலை 6.03 மணி முதல் 7.44 மணி வரையிலான சுபவேளையில்
இடம்:- 3ஆம் கட்டை, ஆனைக்கோட்டை.

எமது கனிஷ்ட புத்திரி திருநிறைச்செல்வி

### கிருஷியா

அவர்களை ஆசீர்வதிக்க வருகைதருமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(92405) திரு.த.சத்தியதாசன் (சத்யா -சோதிடர்) குடும்பத்தினர்

## YOGI HOME SCIENCE ACADEMY

☆ 21.09.2001 வெள்ளிக்கிழமை முதல் அனைத்து மனையியல் வகுப்புகளும் ஆரம்பமாக உள்ளன. சேர விரும்புவோர் உடன் தொடர்பு கொள்ளவும்.

☆ யாழ்.பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் பட்டம் பெறும் மாணவிகள் தம்மை அழகாக **HAIR STYLE, DRESSING** செய்து கொள்வதற்கு முன்கூட்டியே எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

**YOGI BEAUTY PARLOUR**
75, அம்மன் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

(92406)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது பாடசாலையில் அதிபராகக் கடமையாற்றி இடமாற்றம் பெற்றுச் சென்றவரான

### உயர்திரு.அப்புக்குட்டி நடராஜசுந்தரம்

அவர்கள் 01-06-1996 முதல் அதிபர் தரம் Iஇற்கு பதவியுயர்வு பெற்றமையையிட்டு அவரை உளமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
சக ஊழியர்கள்.
யா/உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலை

(C/18307)

# கண்ணீர் அஞ்சலி

வடமராட்சி லயன்ஸ் கழகத்தின் முன்னாள் தலைவரும் பருத்தித்துறை நகரசபை ஓய்வுபெற்ற செயலாளருமாகிய லயன் ந.சோமசுந்தரம் அவர்களின் அன்புத் துணைவியாராகிய ஓய்வுபெற்ற ஆசிரியர்

### திருமதி கோகுலம் சோமசுந்தரம்

அவர்களின் மறைவால் துயருறும் அமரரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தையும் அமரருக்கு அஞ்சலியையும் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(92399) வடமராட்சி லயன்ஸ் கழகம்.

# கண்ணீர் அஞ்சலி

யாழ்.வண்ணை வீசுவேச விநாயகர் ஆலயத்தின் முன்னாள் தலைவராகவும் செயலாளராகவும் ஆயுட்கால உறுப்பினராகவுமிருந்த ஐயனார் கோயிலடி இல.10, ஓடை ஒழுங்கையைச் சேர்ந்தவரான

### நவரட்ணம் சோமசுந்தரம்

(F.C.I.S, MIMgt)

அவர்கள் காலமாகிய செய்தி அறிந்து நாம் மிகவும் துயருறுகின்றோம். அவரது குடும்பத்தினருக்கு எங்களது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அமரரது நல்லாத்மாவானது சாந்தியடைய வீசுவேச விநாயகப் பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.

- ஆலய பரிபாலன சபை.

*ஐயனார் கோயிலடி,*
*விசுவேச விநாயகர் ஆலயம்,*
*வண்ணார்பண்ணை.*
(92403)

## G.A.Q. 1st in com. யாழ்., பேராதனை கல்வியாண்டு 2002/2003 (வெளிவாரி)

☞ A/L இல் கலை, வர்த்தகம், கணிதம், விஞ்ஞானம் இவற்றில் 3 பாடம் சித்தி அடைந்தவர்களும், பயிற்றப்பட்ட ஆசிரியர்களும் இப்பரீட்சைக்குத் தகுதி உடையவர்களாவர்.

☞ இவற்றுக்குரிய பதிவுகள் யாவும் எமது நிறுவனத்தினால் செய்து தரப்படும்.

இவற்றுக்குரிய விரிவுரைகள் ஆரம்பம்:- 29-09-2001

*புதிய உயர் கல்லூரி, ஆரியகுளம், யாழ்ப்பாணம்.*
(92397)
S.அருள்நங்கை, *நிர்வாகி*

## கிணற்றில் இருந்து சடலமாக மீட்கப்பட்ட வயோதிபப் பெண்ணின் மரணம் கொலை என பகிரங்கத் தீர்ப்பு

நெல்லியடி, செப். 18

பருத்தித்துறைப் பகுதியில் கிணறு ஒன்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்ட வயோதிபப் பெண்ணின் மரணம், கொலை என பகிரங்கத் தீர்ப்பு வழங்கப்பட்டது.

பருத்தித்துறை ஐயனார் வீதியைச் சேர்ந்த கந்தையா கணேசநாயகி (வயது 83) என்பவரது சடலமே நேற்று முன்தினம், பருத்தித்துறைப் பொலீஸாரினால் மீட்கப்பட்டிருந்தது.

இது தொடர்பான பிரேத பரிசோதனையும், மரண விசாரணையும் நேற்று நண்பகல் மந்திகை மருத்துவமனையில் நடைபெற்றன.

பிரேத பரிசோதனையை மேற்கொண்ட பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் எஸ்.கதிரவேல்பிள்ளை, குறித்த எலும்புக் கூட்டில், மண்டை ஓட்டின் பின்புறம் எரியூட்டப்பட்டிருந்ததாகவும், ஏனைய எலும்புகள் குமைந்த நிலையிலும் ஆங்காங்கே எரிந்த நிலையில் மயிர்களுடனும் காணப்பட்டன என்றும் எலும்புகளில் வெட்டுக் காயங்கள், முறிவுகள் எதுவும் இல்லை என்றும், இடுப்பு வளையத்தைக் கொண்டு இந்த எலும்புக்கூடு ஒரு பெண்ணின் உடையது எனவும் தெரிவித்திருந்தார்.

வடமராட்சிப் பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி இ. கிருபாகரசூரியன் மரண விசாரணையை நடத்தினார்.

இறந்தவரின் பேர்த்தியான செல்வி திலகவதி பெரியதம்பி (வயது 60) அயலவரான இராசலிங்கம் பகீரதன் (வயது 20) ஆகியோர் சாட்சியமளித்தனர்.

இந்த மரணம், கொலை என பகிரங்கத் தீர்ப்பு வழங்கிய மரண விசாரணை அதிகாரி மீட்கப்பட்ட எலும்புக் கூட்டை பொலித்தீன் பையில் பொதி செய்து சுப்பர்மடம் பொது மயானத்தில், புலோலி மத்தி கிராம சேவை அலுவலர் ஏ. பத்திநாதர் முன்னிலையில் அடையாளம் வைத்துப் புதைக்குமாறு பணித்தார். எலும்புக் கூட்டுப் பொதியை இறந்தவரது உறவினர் செல்வி தி. பெரியதம்பியிடம் கையளித்தார்,

இதேவேளை—

அப்பகுதியிலிருந்து பருத்தித்துறை பொலீஸாரினால் மீட்கப்பட்ட சில எலும்புகளை, பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில் ஒப்படைக்குமாறும், பொலீஸாருக்கு உத்தரவிட்ட மரண விசாரணை அதிகாரி, இக்கொலைச் சம்பவத்தில் தொடர்புடைய கொலையாளிகளைக் கைது செய்ய நடவடிக்கை எடுக்குமாறு, பருத்தித்துறை பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரிலால் குமாரதேவ ஹிரிக்கு உத்தரவிட்டார்.

பருத்தித்துறை பொலீஸ் நிலைய சார்ஜன்ட் அபேவர்த்தன, பொலீஸ் கான்ஸ்டபிள் ஆர். கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் சாட்சிகளை நெறிப்படுத்தினார்கள்.

தனிமையில் வசித்து வந்த இப்பெண்ணிடம் ஒரு லட்சம் ரூபா பணமும், 6 பவுண் நகைகளும் இருந்தன என்பது விசாரணையின்போது தெரியவந்தது.

(ஐ-109)

## வீதியின் குறுக்கே ஓடிய நாயால் ஏற்பட்ட விபரீதம்!

யாழ்ப்பாணம், செப். 18

வீதியின் குறுக்கே ஓடிய நாய் ஒன்றுவேகமாகச்சென்ற மோட்டார்சைக்கிளில் சிக்கியதால் ஏற்பட்ட விபத்தில் ஒருவர் படுகாயமடைந்தார்.

யாழ்ப்பாணம் முனீஸ்வரன் ஒழுங்கையில் நேற்று முன்தினம் இரவு 8 மணியளவில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் ஈச்சமோட்டை, விதானை ஒழுங்கையைச் சேர்ந்த அன்ரனியேசுதாஸன் ஜெயக்குமார் (வயது 26) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

படுகாயமடைந்த அவர் சுயநினைவிழந்த நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் சந்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(க-15)

## காணாமற்போனோர் பற்றிய விசாரணைக்கு அழைக்கப்பட்டோர்

யாழ்ப்பாணம், செப். 18

காணாமற்போனோர் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வரும் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளைத் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்வதற்காக கீழ்வரும் 14 பேரையும் யாழ். பொலீஸ் நிலையத்திற்கு வருகை தருமாறு கேட்டுள்ளனர்.

காணாமற் போனவர்களினதும் அது தொடர்பான விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளவர்களினதும் பெயர் விவரங்கள் வருமாறு:

★ தவரட்ணம் பிரபாகநேசன் (கோவை இல. பி.ஐ 9/95) 50/18, செட்டித்தெரு, நல்லூர், யாழ்ப்பாணம். அழைக்கப்பட்டவர்: அப்பகுதி கிராமசேவகர்.

★ வேலாயுதம்பிள்ளை செல்வராஜா (கோவை இல. பி. ஐ. 9/6) அன்னைதோட்டம் வீதி, கொக்குவில் தெற்கு யாழ்ப்பாணம். அழைக்கப்பட்டவர்கள்: சண்முகராஜா (தபாற்கந்தோர், இளவாலை) மற்றும் அப்பகுதி கிராமசேவகர்.

★ பரவு சந்திரசேகரன் (கோவை இல. பி. ஐ. 358) 49, புதிய வீதி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம். அழைக்கப்பட்டவர், ஜே/66 கிராம அலுவலர்.

★ கந்தசாமி செந்தீபன் (கோவை இல. பி. ஐ 9/114) மீசாலை கிழக்கு, மீசாலை. அழைக்கப்பட்டவர்கள்- கந்தசாமி சதீபன், ஸ்தலதா— மீசாலை–

★ராசையா சுப்பிரமணியம் (கோவை இல. பி.ஐ. 9/181) சின்னககேணி, வட்டுக்கோட்டை. அழைக்கப்பட்டவர் அப்பகுதி கிராம அலுவலர்.

★ மார்க்கண்டு விஜயகுமார் (கோவை இல. பி. ஐ. 410) அழைக்கப்பட்டவர் ஜே/97 கிராம அலுவலர்.

★ அன்ரன் நிக்சன் கொமறன் (கோவை இல. பி. ஐ. 397) குருநகர் மேற்கு, அழைக்கப்பட்டவர் ஜே/69 கிராம அலுவலர்.

★ பாலசிங்கம் சுதாகரன் (கோவை இல. பி. ஐ 9/98) பலாலிச் சந்தி, நீர்வேலி. அழைக்கப்பட்டவர் அப்பகுதி கிராம அலுவலர்.

★ சரவணை சாருமதி (கோவை இல. பி.ஐ. 220) இமையாணன் கிழக்கு, வல்வெட்டித்துறை, அழைக்கப்பட்டவர்கள்:- ராசமாலா மதிவதனி, வேலுப்பிள்ளை பூர்ணிமாவின் சகோதரன் மற்றும் ஆரோக்கியா, ஜே/ 342 கிராம அலுவலர் மற்றும்—

★ சின்னட்டி கோபாலகிருஷ்ணன் (கோவை இல. பி 77) கைதடி தெற்கு, அழைக்கப்பட்டவர்:- அப்பகுதிக் கிராம அலுவலர்.

★ தங்கவடிவேலு ராஜேந்திரகுமார் (கோவை இல. பி/ 92) கைதடி தெற்கு. அழைக்கப்பட்டவர்:- அப்பகுதி கிராம அலுவலர்,

★ இமானுவேல் மரியஜெயசிலன் (கோவை இல. பி/ 29) நாவற்குழி கிழக்கு, அழைக்கப்பட்டவர்:- அப்பகுதிக் கிராம அலுவலர்.

★ பத்மநாதன் சுதர்சன் (கோவை இல. பி/56) நுணாவில் மேற்கு, சாவகச்சேரி அழைக்கப்பட்டோர் சாமிநாதன் சிவயோகநாதன், சின்னத்தம்பி மகேந்திரராஜா, சின்னராசா சோமன் மற்றும் அப்பகுதி கிராம அலுவலர்.

★ ரத்தினசிங்கம் ராஜ்குமார் (கோவை இல. பி/61) கைதடி கிழக்கு, அழைக்கப்பட்டோர்:- செல்லையா ஜெயபாலசிங்கம் மற்றும் அப்பகுதி கிராம அலுவலர்.

(ஒ-9-ரி)

## உறவினருக்கு தகவல்

யாழ்ப்பாணம், செப். 18

கடந்த மாதம் 10 ஆம் திகதி வவுனியா வைத்தியசாலையில் 'சயனைட்' உட்கொண்டு மரணமடைந்ததாகப் பொலீஸாரால் தெரிவிக்கப்பட்ட யுவதி வன்னியில் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதியில் உயிருடன் இருப்பதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்துக்கு வவுனியா அலுவலகத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

வவுனியா பொலீஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நடேசு கலாமதி (வயது 19) என்ற யுவதி நெஞ்சு நோவு காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த சமயம் 'சயனைட்' உட்கொண்டு இறந்ததாகப் பொலீஸாரால் தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால் அந்தப் பெயர் விவரங்களையுடைய யுவதி வன்னியில் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதியில் உள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச் சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணத்தில் உள்ள குறிப்பிட்ட யுவதியின் உறவினர்கள் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகம் ஊடாகத் தொடர்பு கொண்டு விசாரித்தபோதே இத் தகவல் தெரியவந்திருக்கிறது.

(ஐ-10-ரி)

## குடாநாட்டில் மரக்கறி விலை வீழ்ச்சி

யாழ்ப்பாணம், செப். 18

குடாநாட்டில் தற்போது மரக்கறி வகைகளின் விதை வீழ்ச்சியடைந்துள்ளது. அதே சமயம் தேங்காய், உருளைக் கிழக்கு ஆகியவற்றின் விலைகள் உயர்ந்துள்ளன.

நெல்லியடிச் சந்தையில் கடந்த இரு தினங்களுக்கு முன்னர் மரக்கறிகள் விற்ற விலைகள் வருமாறு:-

பயிற்றங்காய் கிலோ 15 ரூபா, பாகற்காய் 20 ரூபா, கத்தரிக்காய் 20 ரூபா, மரவள்ளிக்கிழங்கு 10 ரூபா, வெங்காயம் 20 ரூபா.

உருளைக்கிழங்கு கிலோ 120 ரூபாவாகவும், தேங்காய் 20 ரூபா முதல் 35 ரூபா வரையும் விற்கப்பட்டன.

(ச-31)

## மக்கள் ஒன்று திரண்டு யுத்தத்துக்கு எதிராகக் குரல் எழுப்ப வேண்டும்

### அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கூறுகிறார்

யாழ்ப்பாணம், செப். 18

மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து யுத்தத்துக்கு எதிராக உரத்துக் குரல்கொடுக்க வேண்டும். அப்போதுதான் யுத்தத்துக்கு முடிவு ஏற்படும்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

தீவுப்பகுதியைச் சேர்ந்த வர்த்தகர்கள் மத்தியில் உரையாற்றுகையில் அமைச்சர் இப்படிக்கூறியதாக ஈ. பி. டி. பியின் செய்திக்குறிப்பு ஒன்று தெரிவிக்கின்றது.

டக்ளஸ் தேவானந்தா மேலும் கூறியதாவது:-

வகுப்பறையில் அமைதி பேணப்பட வேண்டுமானால் ஆசிரியர் மெல்லிய குரலில் அமைதி என்று கூறினால் மாணவர்கள் அடங்கிப்போக மாட்டார்கள். உரத்த குரலில் அமைதி என்பதை எடுத்துரைக்கும்போது நிசப்தம் தானாக நிலவும். அதுபோல பலத்த சத்தங்களுடன் வரும் யுத்தத்தை நிறுத்த வேண்டுமானால் மக்கள் அனைவரும் ஒருங்கிணைந்து உரத்த குரலில் யுத்தம் வேண்டாம் என்று முழங்கவேண்டும்.

காந்தியின் உருவப் பொம்மைகள் போலக் கண்களையும் காதுகளையும் வாயையும் பொத்திக்கொண்டிருந்தால் ஆபத்துக்குள் தான் சிக்க நேரிடும். தீயதைப் பார்க்கக்கூடாது என்று ஒதுங்கிக்கொண்டால் மிதிவெடிகளில்தான் நாம் சிக்க நேரிடும். தீயதைக் கேட்கக்கூடாது எனப் புறக்கணித்தால் உங்களுக்கு எதிராக நடக்கும் சதி நாசவேலைகள் பற்றிய தகவல்கள் கிடைக்காமல் போய்விடலாம். எனவே தீயது குறித்த விழிப்புணர்வுடன் நீங்கள் இருக்க வேண்டியது அவசியம். அப்போதுதான் தீவகம் தொடர்ந்தும் அமைதிப் பூங்காவாக நிலைக்கும்.

1990 ஆம் ஆண்டில் தீவுப் பகுதிகளில் தங்கியிருந்த மக்களுக்குச் சேவையாற்ற முன்வரும்படி எல்லாக் கட்சிகளையும் இயக்கங்களையும் கேட்டுப் பார்த்து இறுதியாகவே அப்போதைய பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன்விஜயரத்ன எம்மை அணுகினார். நாங்கள் கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு அன்றுமுதல் உங்களுடனேயே வாழ்ந்து வருகின்றோம்.

அன்று ஈ.பி.டி.பி. நிவாரணப்பொருள்களைக்கொண்டு போய் ஆடுமாடுகளுக்கும் பனை, தென்னைகளுக்கும் தான் கொடுக்கிறது என்று கேலிபேசியவர்கள் இன்று நாம் அடிமைப்படுத்தி வைத்திருப்பதாக கூக்குரலிடுகின்றனர் என்றார்.

சுமார் முந்நூறுக்கும் அதிகமானவர்கள் பங்குபற்றிய இக் கலந்துரையாடலில் ஊர்காவற்றுறை பிரதேச சபைத் தலைவரும், ஈ. பி. டி. பியின் தீவக அமைப்பாளருமான ந. மதனராஜா, வேலணை பிரதேச சபைத்தலைவரும் ஈ. பி. டி. பியின் வேலணைப் பிரதேச அமைப்பாளருமான ந. கருணாகர குருமூர்த்தி நெடுந்தீவு பிரதேசசபைத் தலைவர்புலவர் அரியநாயகம் ஈ. பி. டி. பி யின் புங்குடுதீவு அமைப்பாளர் போல் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

இப்படி அந்தச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-3)

## மத்திய கல்லூரி மாணவர்கள் இருவர் பொலீஸாரால் கைது!

யாழ்ப்பாணம், செப் 18

யாழ். மத்திய கல்லூரியில் கல்வி பயிலும் இரு மாணவர்கள் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை அவர்களது வீடுகளில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

திருநெல்வேலி, மாரியம்மன் வீதியைச் சேர்ந்த சுப்பிரமணியம் பிரதீபன் (வயது 21) என்ற மாணவன் அன்று அதிகாலை 5.45 மணியளவிலும் —

கொக்குவில், ஆடியபாதம் வீதியைச் சேர்ந்த செ. பஸ்ரியான் பிரதீப்ஸன் (வயது 20) என்ற மாணவன் அன்று காலை 6 மணிக்கும் —

அவரவர் வீடுகளில் வைத்துப் பொலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதாக அவர்களின் உறவினர்கள் முறைப்பாடு செய்துள்ளனர்.

(ஐ-10-ரி)

## நாவாந்துறையில் கசிப்பு விற்ற இருவர் சிக்கினர்

யாழ்ப்பாணம், செப். 18

நாவாந்துறைப் பகுதியில் கசிப்பு விற்பனையில் ஈடுபட்டு வந்த இருவர் அப்பகுதி கிராம அலுவலரான செ. தி. சகுந்தலாதேவியிடம் சிக்கியுள்ளனர்.

யாழ். மதுவரித் திணைக்கள அதிகாரிகளுடன் இணைந்து பிரஸ்தாபநபர்களை மடக்கிப் பிடித்த கிராம அலுவலர் அவர்கள் மீது வழக்குத் தாக்கல் செய்ய நடவடிக்கை எடுத்திருக்கிறார்.

பிரஸ்தாபநபர்கள் இருவரும் கசிப்பு விற்பனையில் ஈடுபட்டதற்காக முன்னரும் நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்டவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

(ஐ-7)

## உடுப்பிட்டிச் சந்தை புதிய கட்டட வேலைகள் பூர்த்தி

சாவகச்சேரி, செப். 18

உடுப்பிட்டி பொதுச் சந்தையில் நிர்மாணிக்கப்பட்டுவரும் புதிய கட்டடத் தொகுதியின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

இக்கட்டடத் தொகுதியில் - உடுப்பிட்டி உபதபாலகத்திற்கும் இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. முன்னரும் தபாலகம் இதே இடத்தில் இயங்கியது குறிப்பிடத்தக்கது.

இச்சந்தை கரவெட்டி தெற்கு - மேற்குப் பிரதேச சபையால் நிர்வகிக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

(க-31)



பருத்தித்துறை கரையோரப் பகுதியில் பருத்தித்துறை நகர சபையால் ஏற்படுத்தப்படவுள்ள குடிதண்ணீர் விநியோகத்துக்கென சென்.தோமஸ் சனசமூக நிலையத்துக்கு அருகில் அமைக்கப்படவுள்ள தண்ணீர்த் தொட்டிக்கான அடிக்கல்லை பருத்தித்துறை நகர சபைத் தலைவர் வின்சன் கெனடி நடுவதைப் படத்தில் காணலாம். அருகில் உப தலைவர் என்.மணிவண்ணன், செயலாளர் எஸ்.அன்ரன் ஆகியோர் உள்ளனர். *(படம்: வடமராட்சிச் செய்தியாளர்.)*


JAFFNA SCIENCE ASSOCIATION

SECTION C
A TALK WILL BE PRESENTED
By
***Dr.S.KANNATHASAN***
LECTURER IN PARASITOLOGY
ON
**'FACTS BEHIND CREEPING ERUPTION'**
(சேத்துப் புண்)
IN LECTURE HALL, FACULTY OF MEDICINE
ON SEPTEMBER 20.2001
AT 2.30 p.m
*ALL ARE WELLCOME*
(C/18311) **Secretary Section c - J.S.A**



நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்

**யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய கட்டட**
புனரமைப்புக்கு பத்து லட்சம் ரூபா நிதியை ஒதுக்கீடு செய்து, அந்நிதியிலிருந்து ஐந்து லட்சம் ரூபாவை உடன் வழங்கி உதவியவர்களான,



வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு - கிழக்கு தமிழ் விவகாரம், இந்து சமய கலாசார அமைச்சரும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமுமான மாண்புமிகு அமைச்சர்
**கே.என்.டக்ளஸ் தேவானந்தா**
அவர்களையும்



யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் பிரதம அமைப்பாளருமான கௌரவ
**. சா.வே.குகேந்திரன் (ஜெகன்)**
அவர்களையும்



ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ்.மாவட்ட பிரதி அமைப்பாளர்
**உயர்திரு. க.மணிபல்லவராஜன் (நிஷாந்தன்)**
அவர்களையும்



ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ்.மாநகர சபை உறுப்பினரும், யாழ்.கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தின் பழைய மாணவருமான
**உயர்திரு. க.கிங்ஸ்லி கணேசன்**
அவர்களையும்

*நன்றியுடன் மனமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.*

- பாடசாலைச் சமூகம் -
(92412) யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்.



கண்ணீர் அஞ்சலி

**வைத்திலிங்கம் தெய்வேந்திரம்**
*(ஊழியர், யா/நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலை)*
அவர்களின் திடீர் மறைவுக்கு எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவிப்பதோடு அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.
(92408)


## தேசிய சேமிப்பு வங்கியின் விசேட கருமபீடம்

யாழ்ப்பாணம்,செப்.18

வடமராட்சி வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு தேசிய சேமிப்பு வங்கியின் பருத்தித்துறைக் கிளையின் உற்சவ கால விசேட கருமபீடத்தை பருத்தித்துறை நீதிமன்ற மேலதிக நீதிவான் அ.பிரேம்சங்கர் நேற்றுப் பகல் திறந்து வைத்தார்.

தேசிய சேமிப்பு வங்கி பருத்தித்துறைக் கிளையின் முகாமையாளர் எஸ்.பரமானந்தம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மல்லாகம் நீதிமன்ற நீதிவான் பா.சுப்பிரமணியம், சுவாமி சித்ரூபானந்தா ஆகியோரும் கலந்துகொண்டனர்.

உற்சவம் முடிவடையும் வரை இந்த விசேட வங்கிக் கருமபீடம் தொடர்ந்து நடைபெறும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (க-10-173)

## உடுவில் வாசிக்கு ஒரு வருட சிறை!

வலி.வடக்கு,செப்.18

பல்வேறு திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடையவர் எனக் குற்றஞ் சாட்டப்பட்டவர் குற்றத்தை ஒப்புக் கொண்டதைத் தொடர்ந்து ஒருவருட கடூழியச் சிறைத்தண்டனை மல்லாகம் மாவட்ட நீதிமன்ற நீதிபதி பா. சுப்பிரமணியத்தினால் விதிக்கப்பட்டுள்ளது.

உடுவில் பகுதியைச் சேர்ந்தது. சிவகுமார் என்பவருக்கே இத்தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே இவர் யாழ்.நீதிமன்ற பரப்பினுள் திருட்டில் பிடிபட்டதைத் தொடர்ந்து ஒருவருட கால சிறைத் தண்டனையை அனுபவித்து வருவதுடன் யாழ்.மாவட்டத்திலுள்ள பல நீதிமன்றங்களினால் ஒத்திவைக்கப்பட்ட சிறைத் தண்டனைகளுக்கும் ஆளாகியுள்ளார் என்றும் நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டிருந்தது.

இவை யாவற்றையும் கருத்திற் கொண்டு ஏற்கனவே அனுபவித்து வரும் ஒருவருடகால சிறைத் தண்டனை பூர்த்தியடைந்த பின்னர் மேலும் ஒருவருட சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும் என்றும் - நீதிபதி கட்டளையிட்டுள்ளார். (க-86)

## பெண் குழந்தையை தத்தெடுத்த ஆசிரிய தம்பதி!

யாழ்ப்பாணம்,செப்.18

மந்திகை அரசினர் வைத்தியசாலையின் பராமரிப்பில் இருந்த மூன்றரை மாதப் பெண்குழந்தை ஒன்றைத் தத்தெடுப்பதற்கு இளம் ஆசிரியத் தம்பதியருக்கு பருத்தித்துறை நீதிமன்றினால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

பிரசவ காலத்தில் இருந்து இன்றை வரை நீதிமன்றின் ஆணைப்படி வைத்தியசாலையின் பிரசவ விடுதியில் மேற்படி குழந்தை பராமரிப்பில் இருந்து வந்தது.

இக்குழந்தையைத் தத்தெடுப்பதற்கு 21 குடும்பங்கள் விண்ணப்பித்திருந்த போதிலும் ஆசிரியத் தம்பதிக்கு நீதிமன்றினால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (க-10-173)

## குருநகரில் சேதமடைந்த வீதிகள் திருத்தம்

குருநகர்,செப்.18

யாழ்.சென்ஜேம்ஸ் மகா வித்தியாலய வீதியை செப்பனிடும் வேலையை யாழ்மாநகர சபை தற்போது ஆரம்பித்துள்ளது.

குண்டும் குழியுமாகக் காணப்பட்ட இவ் வீதியை திருத்தியமைக்குமாறு யாழ்.சென்ஜேம்ஸ் மகா வித்தியாலய அதிபர் யாழ். மாநகரசபையிடம் மகஜர் சமர்ப்பித்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை -

ரெக்கிளமேசன் மத்திய கிழக்கு வீதியின் குறுக்கு வீதியும் தற்போது செப்பனிடப்பட்டு வருவது குறிப்பிடத் தக்கது. (க-51)

## உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம்,செப்.18

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம், வடமராட்சி விளையாட்டுக் கழகங்களுக்கு இடையில் திக்கமுனை மைதானத்தில் நடத்தி வரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று இடம்பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

- பிற்பகல் 3.30 மணி - கலைமதி 'ஏ' அணி எதிர் கழுகுகள் 'பி' அணி.
- மாலை 4.30 மணி - வல்லை அணி எதிர் கழுகுகள் 'ஏ' அணி.

## அல்வாயில் மிதிவெடியில் இளைஞர் படுகாயம்

யாழ்ப்பாணம்,செப்.18

அல்வாய்ப் பகுதியில் நேற்றுக் காலை இடம்பெற்ற மிதிவெடிச் சம்பவத்தில் படுகாயம் அடைந்த இளைஞர் ஒருவர் மந்திகை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அல்வாய் கிழக்கு, தாமன் தோட்டத்தில் நேற்றுக் காலை 8 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் புலோலி தெற்கு, குரும்பைகலட்டியைச் சேர்ந்த கந்தசாமி குலேந்திரன் (வயது 32) என்ற இளைஞரே படுகாயமடைந்தவர் ஆவார். (க-10-173)

# வாசகர் திருமுகம்

## ஆதங்கமா, ஆவேசமா?

08-09-2001ஆம் திகதிய உதயனின் வாசகர் திருமுகம் பகுதியில் வெளியான "கொடுப்பனவில் வேறுபாடு ஏன்?" என்ற தலைப்பிலான திருமுகம் தொடர்பாக பின்வரும் விடயங்களை முன்வைக்கின்றேன்.

தென்மராட்சியின் இருந்து இடம்பெயர்ந்த முன்பள்ளி ஆசிரியர்கள் **E.P.D.P.** யாழ்.அலுவலகத்திற்கு கொடுப்பனவு வழங்குகிறார்கள் என்றவுடன் ஓடோடிச் சென்றதும் பின்னர் அங்கு கொடுப்பனவு இல்லை என்றபின் கச்சேரிக்கும், நல்லூர் பிரதேச சபைக்கும் அலைந்து திரிந்தும் சம்பந்தப்பட்ட ஆசிரியை எந்தவிதமான முன்விளக்கமோ, முன்னேற்பாடோ இல்லாதவர் என்ற ஐயப்பாட்டையே தோற்றுவிக்கின்றது.

கடந்த ஆண்டு இடம்பெயர்ந்த இந்த தென்மராட்சி ஆசிரியைகள் தமக்கு என்று சம்மேளனமோ சங்கமோ ஆரம்பித்து இவ்வாறு கொடுப்பனவுகள் பெற வழிவகைகள் செய்திருக்கலாமே. அதைச் செய்யாமல் இருந்து விட்டு அலைவதால் என்ன பிரயோசனம் இருக்கிறது.

வலிகாமம், வடமராட்சி போன்ற இடங்களில் உள்ள முன்பள்ளி ஆசிரியர்களுக்குக் கொடுப்பனவுகள் ஆயிரக்கணக்காக வழங்கப்படுவதில்லை. ஒரு முன்பள்ளி ஆசிரியைக்கு பிள்ளைகளாலும், முன்பள்ளிகளை நடத்தும் கழகத்தினாலும் மற்றும் பிரதேச சபை, மாநகர சபை போன்ற எலலாவற்றினாலும் கொடுப்பனவுகள் கிடைப்பதில்லை. ஆனால் சம்பந்தப்பட்ட ஆசிரியை இது குறித்து தவறாகப் புரிந்துவிட்டார் போலும். அப்படி மேலதிகமான கொடுப்பனவுகள் கிடைத்தால் ஆயிரம் ரூபா கொடுப்பனவுக்காக நாங்களும் அலைக்கழிந்திருக்க மாட்டோம். முன்பள்ளிகள் எந்த அமைப்புக்களினால் நடத்தப்படுகின்றனவோ அவற்றினால் மட்டும் தான் கொடுப்பனவு வழங்கப்படுகின்றது என்பதை அனைவரும் அறிந்து வைத்திருக்க வேண்டும்.

வாக்குப்போட உரிமை இருக்கிறதா? இல்லையா? என்று தேர்தல் ஆணையாளரிடம் அல்லது தத்தமது கிராம அலுவலரிடம்தான் தெளிவு படுத்திக்கொள்ள வேண்டும். அதைவிடுத்து முன்பள்ளி கொடுப்பனவுக்கும், வாக்குரிமைக்கும் ஏன் முடிச்சுப் போட சம்பந்தப்பட்ட ஆசிரியை விழைகிறார்?

வலிகாமம், வடமராட்சிப் பகுதிகளுக்கு இனிமேல் இடம்பெயர்வு வராது என்பதற்கு என்ன உத்தரவாதம்?

*யாழ்ப்பாணம்.* ***எஸ்.கே.கவிதா***
(வலிகாமத்து பள்ளி ஆசிரியை)

## அகதிகளை அச்சுறுத்திய ஐ.நா.நிறுவன உத்தியோகத்தர்

2000ஆம் ஆண்டு செப்ரம்பர் மாதம் மிருசுவில் வடக்கு கிராம வாசிகள் வடமராட்சிக்கு இடம்பெயர்ந்தனர். 10 குடும்பங்களுக்கு புலோலி சினிமாஸ் கட்டடத்தில் தஞ்சமளிக்கப்பட்டது. குடிதண்ணீர் பெறும் குழாய்க்கிணறும் மலசலகூடமும் பழுதடைந்த நிலையில் இருந்தன. ஐ.நா. நிறுவனம் ஒன்று இவற்றைத் திருத்தும் பொறுப்பை ஏற்றுக்கொண்டது. பல்லாயிரம் ரூபா செலவழிக்கப்பட்ட போதும் குழாய்க்கிணற்றிலிருந்து குடிதண்ணீர் வழங்கப்படவில்லை. மலசலகூடமும் செவ்வனே திருத்தப்படவில்லை. இரண்டாவது மலசலகூடத்தை ACTION FAIM திறமையாக திருத்தியமைத்தார்கள்.

திருத்த வேலைகளில் உள்ள குறைபாட்டை சம்பந்தப்பட்ட ஐ.நா. நிறுவன அதிகாரிக்கு 'ஊற்று' நிறுவனம் அறிவித்தது. இக்குறைபாடுகளை ஆராய்வதற்குப் பதிலாக அப்பாவிகளான அகதிகளின் மேல் பழிவாங்கல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. ஒகஸ்ட் 31ஆம் திகதி அந்நிறுவன உத்தியோகத்தர் ஒருவர் எமது முகாமுக்கு வந்து எங்களை வெளியேறி வேறுமுகாமுக்குச் செல்லும்படி பணித்தார். எங்களுக்கு வழங்கப்பட்ட இரு 'பிளாஸ்டிக்' படங்குகளையும் திரும்பப் பெற்றுக்கொண்டார். கூரையிலிருந்த மற்றைய படங்குகளையும் கழற்றித்தருமாறு அவர் மிரட்டினார்.

அகதிகளைப் பராமரிக்க வேண்டிய நிறுவனமே பயமுறுத்தலில் இறங்கினால் யாரிடம் முறையிடுவது? அரச அதிகாரிகளாவது எமக்கு உதவ முன்வருவார்களா? சம்பந்தப்பட்ட நிறுவனப் பொறுப்பதிகாரிக்கு கடந்த 3ஆம் திகதி நேரில் முறைப்பாடு செய்தேன். எனினும் உத்தியோகத்தரின் அத்துமீறலுக்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்ற நம்பிக்கை எனக்கு ஏற்படவில்லை.

*சினிமாஸ் முகாம்,*
*புலோலி.*
**சு.கயிலாயநாதன்**
*(முகாம் பொறுப்பாளர்)*

## நெசவாளர் துயர் துடைக்க யாருமே இல்லையா?

இன்று யாழ்.குடாநாட்டு மக்களைப் பொறுத்தவரையில் பலர் இடம் பெயர்ந்து வாழ்ந்த போதிலும் இன்னும் பலர் வேறு இடங்களில் அகதிகளாகத் தஞ்சமடைந்துள்ளனர். இவர்களுக்கு நிவாரணம் வழங்கப்பட்டாலும் வாழ்க்கையில் இவர்கள் நிர்வாணமே. சிலருக்குத் தனிப்பட்ட செலவாக்குகளாலும், வெளிநாட்டுப் பணத்தாலும் வாழ்வு கொடிகட்டிப்பறக்கிறது.

ஆனால் தொழில் வாய்ப்பு அற்ற நிலையில் அன்றாடம் சீவியத்துக்கு அல்லற்படும் நெசவாளர் சமுதாயத்தைப் பற்றி இதுவரை யாராவது சிந்தித்ததுண்டா? 1990க்குப் பின் மூடப்பட்ட நெசவு நிலையங்களால் வேலையிழந்த ஆயிரக்கணக்கான நெசவு ஆசிரியர்கள், நெசவாளர்கள், மேற்பார்வையாளர்கள் வாழ்வைப் பற்றி யாராவது சிந்தித்ததுண்டா?

இத்தகைய நிலையில் இன்று யாழ்ப்பாணத்தில் எந்தவித குறிக்கோளும் இன்றி அள்ளிவீசப்படும் பணத்தை எண்ணும்போது வறிய உள்ளங்களில் நெருடல்கள் ஏற்படுகின்றன.

ஆகவே, யாழ்.குடாநாட்டில் வதியும் சகல நெசவு நிலையங்களின் ஆசிரியர்கள், நெசவாளர்கள், மேற்பார்வையாளர்கள் அனைவரையும் சம்பந்தப்பட்டவர்கள் அனைவரும் ஒன்றுகூட்டி அவர்களுடன் கலந்துரையாடி அவர்களின் பிரச்சினையை அறிந்து நெசவு நிலையங்களை மீளச் செயற்படுத்த முன்வரவேண்டும் என அரசஅதிபர், சிறுகைத்தொழில் திணைக்களம், வடக்கு - கிழக்கு புனர்வாழ்வு அமைச்சு அனைவரையும் பணிவன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

*கரவெட்டி.* **ஆனந்தன்.**

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது பாடசாலை அதிபர்

**திரு.இராமநாதன் குணநாதன்**

அவர்கள் 01.06.1996 முதல் திறமை, சேவை மூப்பு அடிப்படையில் அதிபர் தரம் I இற்கு பதவியுயர்வு பெற்றமையையிட்டு அவரையும் அவரின் அளப்பரிய சேவையையும் பாராட்டும் அதேவேளை அவர்தம்பணி மேலும் சிறக்கவும் இன்னும் பல பதவியுயர்வுகளைப் பெற்று சீரும் சிறப்புமாக தமது குடும்பத்துடன் பல்லாண்டு காலம் நீடூழி வாழ எல்லாம்வல்ல இறைவனை இறைஞ்சி நிற்கின்றோம்.

ஆசிரியர் கழகம்,
யா/அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயம்,
அதிபர், ஆசிரியர்கள்,
(92421) யா/அச்செழு மெதடிஸ்த மிசன் த.க. பாடசாலை.

## யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் - வரையறுக்கப்பட்டது

# வாகன சாரதிக்கான பதவி வெற்றிடம்

மேற்படி பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
சம்பள அளவு - 312/14 - 3750- 70x10 - 75x10-5200
விண்ணப்ப படிவம், தகைமைகள், ஏனைய விவரங்கள் என்பனவற்றை சங்கத்தில்
ரூபா 10/= செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.

**விண்ணப்ப முடிவு திகதி:- 28. 09. 2001**

*127, காங்கேசன்துறை வீதி,*
*யாழ்ப்பாணம்.* - பொது முகாமையாளர்.
*18. 09. 2001* (C/18313)

# கண்ணீர் அஞ்சலி

எமது கலாசாலையின் விரிவுரையாளர்
திரு. ஆ.இளங்கோ அவர்களின் அன்புத்தாயார்

## அமரர் திருமதி ஆ.சீதேவன்

அவர்கள் (16.09.2001) இறைவனடி சேர்ந்தமையை இட்டு துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மாணவர் ஒன்றியம்
(92422) பலாலி ஆசிரிய கலாசாலை, திருநெல்வேலி.

## தென்மராட்சிக்கு வாகனம் செல்லத்தடை

வடமராட்சிப் பகுதியிலிருந்து தென்மராட்சிப் பகுதிக்கு வாகனங்கள் கொண்டு செல்வது கடந்த சனிக் கிழமை தொடக்கம் தடை செய்யப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-117)

## குடும்பப்பெண் மிதிவெடியில்சிக்கி படுகாயம்!

யாழ்ப்பாணம்,செப்.18

தனது காணிக்குள் தேங்காய் பறித்துக்கொண்டு திரும்பியவேளை மிதிவெடியில் சிக்கிய குடும்பப்பெண் ஒருவர் தனது இடது காலை முழங் காலுக்குக் கீழ் இழந்து படுகாய மடைந்தார்.

சரசாலை வடக்கில் நேற்றுக் காலை 11 மணிக்கு இடம்பெற்ற இச்சம்பவத்தில் அவ்விடத்தில் இருந்து இடம்பெயர்ந்து உடுப்பிட்டி, இமை யாணனில் வசிக்கும் நற்குணம் ரங்க ராணி (வயது49) என்பவரே படுகாய மடைந்த நிலையில் யாழ்.போதனா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள் ளார். (ஒ-15)

ராஜா யாழ்ப்பாணம்
அர்ஜுன், சோனாலி
மற்றும் பலர் நடிப்பில்
கண்ணோடு காண்பதெல்லாம்
தினசரி :- 10.30, 2.30 (புதிய நேரம்)
சனி, ஞாயிறு :- 10.30, 2, 5 (புதிய நேரம்)
(C/18274)

நாகம்ஸ் சுன்னாகம்
ரஜனி, குஷ்பூ, விஜயசாந்தி
நடிப்பில்
மன்னன்
(சீல்ஸ்)
காட்சிகள்:- 11.00, 2.30 (புதியநேரம்)
(92415)

# கண்ணீர் அஞ்சலி

யாழ்/மல்லாகம் பழம்பதி விநாயகர் தேவஸ்தான ஆதீனகர்த்தா
பிரம்மஸ்ரீ முத்தையா குருக்கள் நாகேந்திரசர்மா
அவர்களின் அன்பு மனைவி

## திருமதி ஞானாம்பாள் நாகேந்திரசர்மா

(பட்டம்மா - மல்லாகம்)

நேற்று (17.09.2001) திங்கட்கிழமை மாலை கொழும்பில் காலமானார் என்ற செய்தியை மனவருத்தத்துடன் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைஅருளை வேண்டி பிரார்த்தித்துக் கொண்டு எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

சர்வதேச இந்துமத குருபீடாதிபதி
ஸ்ரீ ஐயப்பதாஸ
சாம்பசிவ சிவாச்சாரியார்.

*சர்வதேச இந்துமத குருபீடம்,*
*கொழும்பு.* (C/18315)

## யாழ்.மாவட்ட விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் - வரையறுக்கப்பட்டது

# கோதுமை மாவு விநியோகம்

பிறிமா சிலோன் லிமிட்டெட் நிறுவனத்தின் யாழ்ப்பாண மாவட்ட விநியோகத்தர்கள் இருவரில் ஒரு நிறுவனமான இச்சமாசம் பிறிமா பொருள்களின் விலைகளை பின்வருமாறு நிர்ணயித்துள்ளது.

| | | | |
|---|---|---|---|
| ❖ வீட்டுப் பாவனைக்கான பிறிமா பிரான்ட் மாவு - | சமாச விலை கிலோ | ரூபா | 19/15 |
| | சங்கங்களின் மொத்தவிலை கிலோ | ரூபா | 19/50 |
| | சங்கங்களின் சில்லறை விலை கிலோ | ரூபா | 19/75 |
| ❖ பேக்கரிகளுக்கான மில் பிரான்ட் மாவு - | சமாச விலை கிலோ | ரூபா | 19/65 |
| | சங்கங்களின் விலை கிலோ | ரூபா | 20/- |
| ❖ றவை - | சமாச விலை கிலோ | ரூபா | 27/- |
| | சங்கங்களின் விலை கிலோ | ரூபா | 30/- |

*171, பிரதான வீதி,*
*யாழ்ப்பாணம்.* (C/18314) - தலைவர்.

# அறிவித்தல்

## பாண் உற்பத்தியாளர், விற்பனையாளர் கவனத்துக்கு

**12.09.2001** புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்.செயலகத்தில் யாழ்.மேலதிக அரசாங்க அதிபர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

- **பாணின் நிறை 450 கிராம் அதன் விலை 12/= ரூபா**
- **450 கிராம் நிறைக்கு குறைந்த நிறையுள்ள பாண் விற்பனை செய்தால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.**

- என்றும் முடிவாகியது.

இத்தீர்மானத்திற்கு பாண் உற்பத்தியாளர் சங்க (நிர்வாகப்) பிரதி நிதிகள் ஒப்புதல் அளித்துள்ளார்கள். எனவே இவ்விடயத்தில் கவன மெடுக்க வேண்டும் எனக்கோருகின்றோம். நிறை குறைந்த பாண் விற் பனை செய்வதால் ஏற்படும் அசௌகரியங்களுக்கு நாம் பொறுப்பாளிகள் அல்லர் என்பதையும் அறியத்தருகின்றோம்.

- நிர்வாகம்,
யாழ்.மாவட்ட வெதுப்பக உற்பத்தியாளர் கூட்டுறவுச்சங்கம் (வ-து).

*இல.3, கண்டி வீதி,*
*பஸ்ரியன் சந்தி,*
*யாழ்ப்பாணம்.* (92414)

# நன்றி நவில்கிறோம்

கடந்த 18.08.2001இல் இத்தாலியில் காலமான

## திருமதி இரத்தினதேவி தேவராசா

(கொக்குவில் மேற்கு)

அவர்களின் மரணச் சடங்கையொட்டிய நிகழ்வுகளிலும் நேற்றைய சபிண்டீகரணம், ஆத்மசாந்திப் பிரார்த்தனை மற்றும் மதியபோசன நிகழ்வுகளிலும் கலந்து கொண்ட எமது உற்றார், உறவினர்களுக்கு எமது நன்றிகள்!

திருமதி இரத்தினம் இராசரத்தினம்,
இராசகோபால் குடும்பம், கோபாலரத்தினம்,
மாமா வேதநாயகம், சின்னம்மா, பெரியம்மாமார்,
தேவனின் உடன்பிறந்த சகோதரர்கள்.

தகவல்:
ந.தனபாலசிங்கம் (மண்டதின்னி)
*சங்கரலிங்கம் சாமியார் வீடு,*
*கொக்குவில் மேற்கு.* (92420)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி துரைச்சாமி தவமணி

காளிகோயிலடி, சங்கானையைச் சேர்ந்த திருமதி துரைச்சாமி தவமணி நேற்று (17.09.2001) திங்கட்கிழமை காலமானார்.

இவர் புங்குடுதீவைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - வள்ளியம்மை ஆகியோரின் அன்பு மகளும், துரைச்சாமியின் (துரை) அன்பு மனைவியும், தயாபரன், லுசிந்தன், கஜேந்தினி, கஜிதா ஆகியோரின் பாசமிகு தாயாரும், இராசமணி, மகாலட்சுமி, காலஞ்சென்ற கிளி, கந்தசாமி ஆகியோரின் அன்புச் சகோதரியும், திருமதி தில்லைராணி, ரவீந்திரன் (டென்மார்க்), சிவப்பிரகாசம், புஸ்பராணி, தர்மலிங்கம், குஞ்சு ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.09.2001) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் பிற்பகல் 2.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்துதிற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
சி.துரைச்சாமி (துரை)
(கணவர், பிள்ளைகள்)

*காளிகோயிலடி,*
*சங்கானை.* (92423)

## கணபதிப்பிள்ளை சின்னம்மா

மாமுனையைச் சேர்ந்தவரும் தற்போது அமெரிக்காவில் வசிப்பவருமான, கணபதிப்பிள்ளை அவர்களின் அன்பு மனைவி சின்னம்மா நேற்று (17.09.2001) பருத்தித்துறையில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசதுரை (பிரதம எழுதுவினைஞர்), தற்போது அமெரிக்காவில் வசிப்பவர்களான இராசலிங்கம், இராசலட்சுமி, இராசரத்தினம், இராசகோபால், ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (18.09.2001) செவ்வாய் மாலை 3.00 மணிக்கு அரசடிலேன் பருத்தித்துறையில் உள்ள சரஸ்தான் இல்லத்தில் வசிக்கும் [அன்னாரது பெறாமகன் வி.தர்மகுலசிங்கம் (பனை அபிவிருத்திச் சபை) அவர்களின் இல்லத்தில்] நடைபெற்று பூதவுடல் கோரியடி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
வி.தர்மகுலசிங்கம்
(பெறாமகன்)

*நிரந்தர முகவரி:-*
*மாமுனை,*
*செம்பியன் பற்று.* (92425)

## தம்பையா விஸ்வநாதர்

(பொன்னுத்துரைப் பத்தர்)

தும்பளை, தங்காலய வீதி, பருத்தித்துறையை வதிவிடமாகக் கொண்ட தம்பையா விஸ்வநாதர் 16.09.2001 ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பையா அவர்களின் அன்பு மகனும் மனோன்மணியின் அன்புக் கணவரும் கணேசதுரை (ஓய்வுபெற்ற தபால் அதிபர் - ஆஸ்திரேலியா), Dr.ஜெகநாதன் (ஓய்வுபெற்ற சுகாதார பணிப்பாளர் நாயகம், கொழும்பு), பத்மநாதன் (கனடா), வைகுந்தநாதன், தில்லைநாதன் (ஜேர்மனி), இந்திராதேவி, சந்திராதேவி (ஆசிரியை, கொழும்பு) ஆகியோரின் அன்புத் தகப்பனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.09.2001) புதன்கிழமை நடைபெற்று பூதவுடல் பருத்தித்துறை கோரியடி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வைகுந்தநாதன்
(மகன்)

*தங்காலய வீதி,*
*தும்பளை,*
*பருத்தித்துறை.* (92426)

## நேற்றுமுன்தினமிரவு

# ஆஸ்திரேலியத் தீவொன்றில் தரையிறங்கிய இலங்கையர்

லண்டன்,செப்.18

ஆஸ்திரேலியாவுக்குள் சட்ட விரோதமாக நுழைவதற்கு வந்ததாகக் கருதப்படும் 68 பேர் கொக்கோ தீவில் இறங்கியுள்ளதாக ஆஸ்திரேலிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இவர்களில் பெரும்பாலானவர்கள் இலங்கையர்களாக இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது.

பெரிய படகு ஒன்றில் நேற்று முன்தினம் இரவு கொக்கோ தீவின் கரையில் வந்திறங்கிய 68 பேரும், தற்போது அந்தத் தீவிலேயே தங்கியுள்ளதாகவும் -

அவர்களை விசாரணைக்குட்படுத்தி மேல் நடவடிக்கைகள் எடுப்பது தொடர்பாக, அதிகாரிகள் ஆலோசித்து வருவதாகவும் அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

கொக்கோ தீவில் தரையிறங்கியுள்ளவர்களில் சுமார் 60 பேர் இலங்கையர்கள் என்று தெரிய வந்துள்ளதாக ஆஸ்திரேலியப் பாதுகாப்பு அமைச்சர் பீட்டர் ரெய்ட் தெரிவித்துள்ளார்.

கொக்கோ தீவு இந்து சமுத்திரப் பிராந்தியம் அருகே அமைந்திருப்பதால், படகுகள் மூலம் இலங்கையிலிருந்து வரும் சட்டவிரோதக் குடியேறிகள் இலகுவாகக் கால்பதிக்கும் இடமாக அது விளங்குவதாக ஆஸ்திரேலிய குடியுரிமை அமைச்சர் பிலிப் ரொட்லொக் கூறியுள்ளார்.

ஆஸ்திரேலியாவுக்குள் சட்டவிரோதமாக நுழைய முயற்சிக்கும் குடியேறிகள், முதலில் ஆஸ்திரேலியாவின் அருகே சின்னஞ்சிறிய தீவுகளில் ஏதாவது ஒன்றில் இறங்கிக்கொண்டு பின்னர் ஆஸ்திரேலியாவில் புகலிடம் கோரி விண்ணப்பிப்பது வழக்கம். ஆனால், தனது தீவுகளில் இறங்கி, அங்கிருந்து புகலிடம் கோரும் தந்திரத்துக்கு எதிராக ஆஸ்திரேலிய அரசு புதிய விதிகளைக் கடைப்பிடிக்க தீர்மானித்துள்ளது.

இதனால் சிறிய தீவுகளில் இறங்கும் சட்டவிரோதக் குடியேறிகள், புகலிடம் பெறவும் முடியாமல், தீவுகளில் இருந்து வெறியேறவும் மார்க்கமறியாமல் பரிதவித்து வருவதாகக் கூறப்படுகிறது.

(ஓ-164)

## சட்டக்கல்லூரிப் பரீட்சையில் இனவாதத்தை தூண்டும் கேள்வி

கொழும்பு,செப்.18

இலங்கைச் சட்டக் கல்லூரிக்கு மாணவர்களைத் தெரிவு செய்வதற்கான அனுமதிப் பரீட்சை வினாத்தாளில் இனவாதத்தைத் தூண்டும்-சிறுபான்மையினரை இழிவுபடுத்தும் - வகையில் கேள்விகள் சில கேட்கப்பட்டிருந்ததாகக் கூறப்படுகிறது.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற மேற்படி பரீட்சைக்குத் தோற்றிய தமிழ் மாணவர்களுக்கு வழங்கப்பட்ட வினாத்தாளிலேயே இனவாதத்தைத் தூண்டும் வகையில் கேள்விகள் அமைந்திருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

'சட்டத்தின் பின்னணி' என்ற பாட அலகில் கேட்கப்பட்டிருந்த வினா ஒன்றில், "சிறுபான்மை இனத்தவரும், பயங்கரவாதிகளும் சட்டத்தை மீறுகின்றார்கள் இதனை பெரும்பான்மை இன மக்கள் பொறுத்துக்கொண்டிருக்கிறார்கள்" என்று குறிப்பிடப்பட்டிருந்ததாம். மேலும் பல கேள்விகளில் இனவாதத்தைத் தூண்டும் நோக்கில் அமைந்திருந்ததாக தமிழ் மாணவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

(ஒ)

## இந்தியப் பாதுகாப்புத்துறையின் 3 அதிகாரிகள் இலங்கை வருகை

கொழும்பு,செப்.18

இந்திய பாதுகாப்பு அமைச்சைச் சேர்ந்த 3 அதிகாரிகளைக் கொண்ட குழு ஒன்று நேற்று அதிகாலை கொழும்புக்கு வந்துள்ளதாகக் கூறப்படுகிறது.

நாட்டில் தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையில் மேற்கொள்ள வேண்டிய பாதுகாப்பு ஏற்பாடுகள் தொடர்பான ஆலோசனைகளை வழங்கவே இந்தியக்குழு இலங்கை வந்துள்ளதாகவும் -

இலங்கைப் பாதுகாப்பு அமைச்சின் அதிகாரிகளுடன், இருதரப்பு ஒத்துழைப்புக் குறித்து இந்தக் குழு பேச்சு நடத்தவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(ஒ-4)

சுடர் ஒளி 23.09.2001 இதழில்

- வடக்குக் கடலில் வெடித்த சமர்!
- திட்டிய மரத்தில் கூர் பார்த்து வல்லவனுக்கு வல்லவனானவன்
- தாக்குதல் அமெரிக்காவில்; தாக்கம் இங்கே! புலிகளுடன் ஒப்புக்கேனும் பேச அரசு முயற்சி
- அமெரிக்கா புகை மண்டலத்துள்; ஆபத்து ஆசியாக் கண்டத்தில்.
- புலிகளின் துண்டுப்பிரசுரம் கிழக்கில் ஏற்படுத்திய பரபரப்பு!
- அரசமைப்புச் சீர்திருத்தம் தலைதூக்கும் சிக்கல்கள்.
- மனிதப் புதைகுழிகளில் யாழ்.ஆஸ்பத்திரிக்கும் ஓர் இடம்.
- மற்றும் சிறுகதை, தொடர்கதை, சிறுவர் பகுதி, வைத்தியம், க்ரைம், விளையாட்டு, சினிமா உட்பட பல்சுவை அம்சங்கள். (C/18316)

வாசிக்கும் நெஞ்சங்களை யோசிக்க வைக்கும் ஒரே பத்திரிகை

### சுதந்திர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை ஆதரவோடு மட்டும் நிறைவேற்றவே அரசு விரும்புகின்றது என்றும் -

அதற்காக சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படவேண்டும் என உயர் நீதிமன்றம் உத்தரவிடும் நிலை உருவாவதை அரசு விரும்பவில்லை என்றும் -

சர்வஜன வாக்கெடுப்பு நடத்தியே அந்த அரசமைப்புத் திருத்தத்தைச் செய்யலாம் என உயர் நீதிமன்றம் உத்தரவிட, வகை செய்யாத விதத்தில் அந்தத் திருத்த நகலைத் தயாரிக்க அரசு விரும்புகின்றது என்றும்-

அரசுத்தரப்பில் தெரிவிக்கப்பட்டதாக அறியவருகின்றது. எனினும் இது விடயத்தில் முடிவு செய்யும் அதிகாரம் உயர் நீதிமன்றத்தைச் சேர்ந்தது என்பதால் இது குறித்து உறுதிமொழி எதனையும் அரசுத் தரப்பால் திட்டவட்டமாகத் தெரிவிக்க முடியாது என்றும் -

இயன்றவரை சர்வஜன வாக்கெடுப்பு நடத்தாமலேயே இந்தச் சட்டத் திருத்தத்தை நிறைவேற்ற முயற்சி எடுக்கப்படும் என்றும் - அரசுத் தரப்பில் மேலும் கூறப்பட்டது.

எனினும் இவ்விடயத்தில் அரசுத் தரப்பினால் ஒரு திட்டவட்டமான - உறுதியான - பதில் அளிக்கப்படாதது ஜே.வி.பி. தரப்புக்கு விசனத்தை ஏற்படுத்தியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்விடயம் குறித்து நீதித்துறையுடன் கலந்தாலோசித்து எதிர்வரும் 24ஆம் திகதி பதில் அளிப்பதாக அரசு கூறியுள்ளது.

சுதந்திர ஆணைக்குழுவைக் கண்காணிக்கும் அரசமைப்புச் சபைக்கு உறுப்பினர்களை நியமிப்பது குறித்தும் ஆராயப்பட்டது. எனினும் இறுதி முடிவு எட்டப்படவில்லை என்று கூறப்பட்டது.

அமைச்சரவையில் 20 பேர் மட்டுமே இடம்பெறவேண்டும் என்ற தமது கோரிக்கையை கலந்துரையாடலில் அரசுக்கு ஜே.வி.பி. ஞாபகப் படுத்தியதாகவும் தெரிகின்றது.

(உ-3)

### நாடாளுமன்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைக்கும் விடயத்தில் இணைந்துள்ளதைக் கண்டிக்கும் வகையிலேயே நாடாளுமன்றப் பகிஷ்கரிப்பு இடம்பெறவிருக்கின்றது'' என்று கூட்டணிப் பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

(ஒ-3)

புதிய வீடியோ CD வெளியீடுகள்

- வீட்டோட மாப்பிள்ளை
- ருத்ரன்
- உன்னில் என்னைக் கண்டேன்
- ராமன் தேடிய ரம்பா

பிரதிகள் உடன் பெறலாம் (92424)

கே.கே.எஸ். வீதி, கொண்டாவில்.

விற்பனையாகிறது!

O/L பரீட்சை வழிகாட்டி - 3
மாதிரி வினாத்தாள்கள் விடைகளுடன்
விலை - 60/=

பூபாலசிங்கம் புத்தகசாலை
இல.4, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். (C/18310)

## அரியாலையில் நடந்த தேடுதலில் கிணற்றிலிருந்து ஆயுதம் மீட்பு!

கொழும்பு,செப்.18

இரகசியத் தகவலையடுத்து அரியாலை கிழக்கில் தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்ட படையினர் நேற்றுமுன்தினம் காலை 8.30 மணியளவில் அப்பகுதியிலிருந்த பாழடைந்த கிணறு ஒன்றிலிருந்து ஒரு ரி.56 ரகத் துப்பாக்கியையும், அந்த ஆயுதத்துக்குரிய மகஸீனையும் கைப்பற்றியுள்ளதாகவும் -

கடந்த 16 ஆம் திகதி முகமாலை முன்னரங்கப் பகுதியில் விடுதலைப் புலிகளுடன் ஏற்பட்ட மோதல் சம்பவம் ஒன்றின்போது ஒரு சிப்பாய் காயமடைந்ததுடன், புலிகளின் தரப்பில் ஒருவர் உயிரிழந்தது ஊர்ஜிதப்படுத்தப்பட்டுள்ளதாகவும்-

விசேட ஊடகத் தகவல் நிலையம் நேற்று வெளியிட்ட களநிலைவர அறிக்கையில் தெரிவித்தது.

(ஒ)

### நிறைவு விழா

யாழ்ப்பாணம்,செப்.18

யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கத்தின் 10 ஆம் ஆண்டு நிறைவு விழா நிகழ்வுகள் நாளை புதன்கிழமை காலை 9 மணி முதல் சங்கத்தின் யாழ்.அலுவலக வளாகத்தில் இடம்பெறவுள்ளன.

காலை 9 மணிமுதல் 11 மணி வரை கோப்பாய் லயன்ஸ் கழக அனுசரணையுடன் மருத்துவ முகாம் இடம்பெறும்.

அதைத்தொடர்ந்து கிரிக்கட் சுற்றுப்போட்டி, பரிசளிப்பு, அதிர்ஷ்டலாபச்சீட்டிழுப்பு, நினைவுப் பரிசில் வழங்குதல், இசைநிகழ்ச்சி ஆகியன இடம்பெறவுள்ளன. (ஒ-3)

### துணைத் தளபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடற்கரும்புலிகளான லெப்டினன்ட் கேணல் அலோஜன் அல்லது அருள் செல்வன்( சிதரம்பரப்பிள்ளை சிவகுமார் - நெடுங்கேணி), மேஜர் காந்தி (யோகசேயோ பெரின் - மன்னார்), மேஜர் அருணா அல்லது சுதா (குணசிங்கம் தவச்செல்வி - யாழ்ப்பாணம்), மேஜர் நித்தியா (செல்வராசா தயாளினி - யாழ்ப்பாணம்) ஆகியோரும் மரணமானதாக விடுதலைப் புலிகள் நேற்று அறிவித்தனர்.

(உ-3-4)

### வவுனியாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திகதி தொடக்கமும் -

முல்லைத்தீவைச் சேர்ந்த மரியதாஸ் பிரதீப் ஜோன்சன் (வயது 25) என்பவரைக் கடந்த 15 ஆம் திகதி தொடக்கமும் -

காணவில்லை என அவர்களது உறவினர்கள் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் வவுனியா அலுவலகத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

(ஒ-4)

### விஜேபால...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டத்தக்கது.

கடந்த வெள்ளியன்று காலையில் ஜனாதிபதி முன்னிலையில் பிரதமர் உட்பட 19 அமைச்சர்கள் பதவியேற்றிருந்தனர். பின்னர் விஜேபால மெண்டிஸும், ஜெயராஜ் பெர்ணாண்டோபுள்ளேயும் அமைச்சர்களாகப் பதவிப் பிரமாணம் செய்ததை அடுத்து அமைச்சர்களின் எண்ணிக்கை 21ஆக உயர்ந்தது. தொடர்ந்து ஆறுமுகம் தொண்டமான் அமைச்சராகப் பதவியேற்கும் போது இந்த எண்ணிக்கை 22ஆக உயரும் என எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் மங்கள சமரவீரவும், விஜேபால மெண்டிஸும் ஜனாதிபதிக்கு உதவும் விதத்தில் தங்களது அமைச்சர் பதவிகளைத் துறந்ததை அடுத்து ஜனாதிபதிக்கு அப்பால் 20 பேரை மட்டும் கொண்ட அமைச்சரவை ஒன்று அமையும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. (உ-3)

### 20 ஆவது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால் அங்கு வைத்து இந்த வைபவம் ஒத்திவைக்கப்பட்டதாக அவருக்குத் தெரிவிக்கப்பட்டது. அதனால் அவர் திரும்பினார்.

அமைச்சர்களின் எண்ணிக்கை இருபதிலும் அதிகரிக்கக்கூடாது என்ற கட்டுப்பாட்டைப் பேணுவதில் ஏற்பட்ட சிக்கல் காரணமாகவே இந்த வைபவம் ரத்துச் செய்யப்பட்டது என்றும் -

தற்சமயம் அந்தச் சிக்கலுக்கு முடிவு எட்டப்பட்டுள்ளதால் ஆறுமுகம் தொண்டமானின் பதவியேற்பு வைபவம் இன்று இடம்பெறும் என்றும் -

நேற்றிரவு தெரிவிக்கப்பட்டது.

(உ-3-4)

### 11 கடற்படை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வைத்துக் கையளித்தனர்.

சடலங்களை கொழும்புக்கு எடுத்துச் சென்று, சட்டவைத்திய அதிகாரி மூலம் பிரேத பரிசோதனை செய்து அறிக்கையைச் சமர்ப்பிக்கும்படியும்-

பிரேத பரிசோதனையின் பின்னர் சடலங்களை அவர்களது உறவினர்களிடம் கையளிக்கும்படியும் -

நீதிவான் உத்தரவிட்டார்.

மரண விசாரணை எதிர்வரும் வெள்ளிக்கிழமை என அறிவித்த நீதிவான் சாட்சிகளை அன்று ஆஜர் செய்யுமாறு உத்தரவிட்டார். (உ-3)

### பயணிகள்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்வதற்குப் பயணச்சீட்டுப் பெற்றவர்களை இன்று காலை பயண ஏற்பாடுகளுடன் மணியம் கட்டடத்தில் உள்ள 'றான்' அலுவலகத்துக்கு வரும் படி ஈ.பி.டி.பி. கேட்டுள்ளது.

'சிற்றி ஒவ் றிங்கோ' கப்பலில் பயணம் செய்வதற்கு 35 வெற்றிடங்கள் உள்ளன என்றும் -

பாதுகாப்பு அனுமதி பெற்ற எவரும் பயண ஒழுங்குகளுடன் சமுகம் தந்து பயணத்தை மேற்கொள்ள முடியும் என்றும் -

ஈ.பி.டி.பி.அறிவித்துள்ளது.

(உ-3)

எமது புதிய வீடியோ CD வெளியீடுகள்

- அள்ளித்தந்தவானம் (பிரபுதேவா, முரளி, லைலா)
- மாயன் (நாஸர், ரோஜா, ரஞ்சிதா, வடிவேலு)

(C/18319)

15, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

எமது புதிய வீடியோ CD வெளியீடு

முரளி, பிரபுதேவாவின்
★ அள்ளித் தந்த வானம்
நாசர், ரோஜாவின்
★ மாயன்

- வீட்டோட மாப்பிள்ளை
- உன்னில் என்னைக் கண்டேன்
- ருத்ரன்
- ராமன் தேடிய ரம்பா

பிரதிகள் உடன் பெறலாம் (C/18317)

வீடியோ விமல்
யாழ்ப்பாணம்.

## கண்ணீர் அஞ்சலி



எனது ஆருயிர் நண்பனான செல்வன்
மு.சிவானந்தன் (ஆனந்தி)
அவர்களின் அன்புச் சகோதரன்

### முத்துலிங்கம் அருளானந்தம் (கண்ணன்)

அவர்கள் 15-09-2001 அன்று காலமானதையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அமரரின் ஆத்மா சாந்திபெற ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றேன்.

மானிப்பாய் வீதி,
ஆறுகால்மடம். (C/18312)

சு.சுபநாதன்
(நிர்வாகி, யாழ்.கல்வி நிலையம்)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 18.09.2001இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.